Registered in Ceylon as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 4 யாழ்ப்பாணம் சுபகிருது சித்திரை 21 ஆம் நாள் துல்கஃதா 28 (4-5-62) வெள்ளிக்கிழமை இதழ் 8




# கனிஷ்ட ஊழியருக்கு குமாஸ்தா பதவி

## அரசாங்கத்தின் புதிய தீர்மானம்

கொழும்பு, வியாழன்

கனிஷ்ட தராதரப்பத்திரத்துடன் அரசாங்கசேவையில்கடமையாற்றும் ஊழியர்களுக்கு குமாஸ்தாக்களாகப் பதவி உயர்வு பெறும் வாய்ப்பை அளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கனிஷ்ட தராதரப் பத்திரத்துடன் (ஜே. எஸ். சி.) அரசாங்கசேவையில் கனிஷ்ட தொழிலாளர்களாகக் கடமையாற்றிவரும் ஊழியர்கள் குமாஸ்தாக்களாகப் பதவி உயர்வு பெற விருக்கிறுர்கள்.

அரசாங்கசேவையிலுள்ள கனிஷ்ட தொழிலாளர்களுக்கு ஒரு தகுதிப் பரீட்சை வைத்து அதில் சித்திபெறுவோர் குமாஸ்தாக்களாகப் பதவி உயர்வு பெறுவர். இதற்கென குமாஸ்தா உத்தியோகத்தில் காலியாகவுள்ள இடங்களில் குறிப்பிட்ட ஒருசத விகிதம் ஒதுக்கிவைக்கப்படும்.

கனிஷ்ட தொழிலாளர்களை குமாஸ்தாக்களாகப் பதவி உயர்வு பெறச்செய்வது என முடிவுசெய்துள்ளது அரசாங்கத்தின் புதிய நடவடிக்கையாகும்.

## 'தி. மு. க. உறவு இரகசிய ஒப்பந்தமல்ல

### தார்மீக ஆதரவு தருபவர்களை மறப்பது நன்றியல்ல!'

### திரு. எஸ். ஜே. வி. விளக்கம்

கொழும்பு, வியாழன்

திராவிட முன்னேற்றக் கழகம் பொதுத் தேர்தலில் ஈட்டிய வெற்றியைப் பாராட்டி திரு. செல்வநாயக கழகத தலைவர் திரு. சி. என். அண்ணுத்துரைக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பிவைத்தற்கு சிலர்கண்டனம் தெரிவித்ததைத் தொடர்ந்து திரு. செல்வநாயகம் நேற்றிரவு ஒரு அறிக்கை விடுத்தார். அந்த அறிக்கையில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது:-

சமீபத்தில் இந்தியாவில் நடந்துமுடிந்த பொதுத்தேர்தலில் குறிப்பாக தமிழ் நாட்டுப்பொதுத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் ஈட்டிய வெற்றியைப் பாராட்டி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவருக்கு நான் அனுப்பிய வாழ்த்துச் செய்தி பொறுப்பற்றதென்றும் அது மோசமான விளைவுகளைக் கொண்டுவருமென்றும் அரசியல் வட்டாரங்களிலும் செய்திப் பத்திரிகைகளிலும் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகம் ஈட்டிய வெற்றியோ அதன் தலைவருக்கு நான் வாழ்த்துச் செய்தி அனுப்பியதோ எனக்கு வியப்பளிக்கவில்லை. நான் வாழ்த்துச் செய்தி அனுப்பியதற்கு ஒரு சிலர் தவறுக கொடுக்கும் விளக்கம்தான் எனக்கு வியப்பளிக்கிறது.

ஈழம்வாழ் தமிழ்ப் பேசும் மக்களைப் பொறுத்த வரையில் திராவிடமுன்னேற்றக் கழகத்தின் பிறப்பு வளர்ப்பு பற்றியோ அது வளர்ந்த பிறந்த சூழ்நிலை ஆகியவை முக்கியமல்ல. அது செயல்படும் முறைதான் இலங்கை வாழ் தமிழ்பேசும் மககளுக்கு முக்கியம்.

### இலங்கை தமிழர் நிலை

1948-ம் ஆண்டில் இலங்கை சுதந்திரமடைந்த நாளிலிருந்து இலங்கை வாழ் தமிழ்ப்பேசும் மக்களின் நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்து வந்துள்ளது.

இந்நாட்டின் பொருளாதார வளத்துக்கு முதுகெலும்பாக விளங்கும் இலங்கைவாழ் தோட்டத் தொழிலாளமக்களின் குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்டு அரசியல் அனுதைகளாக்கப்பட்டனர். தமிழ்ப்பேசும் மக்கள் மரபுவழி வாழ்ந்துவரும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அரசாங்கம் சிங்கள மக்களைத் திட்டமிட்டுக் குடியேற்றித் தமிழர்கள் ஒரு தனி இனமாக இங்கு வாழமுடியாத நிலையைச்செய்துவருகிறது.

இச் செயல்களுக்கெல்லாம் சிகரம்வைத்தாற்போன்று, தமிழ்ப்பேசும் மக்களின் பலத்த எதிர்ப்பையும் பொருட்படுத்தாது 1956-ம் ஆண்டில் 'சிங்களம் மட்டும்' சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றி மக்களாட்சிக்குக் குழிதோண்டியது.

இந்த அநீதிகளை எதிர்த்து இலங்கைத் தமிழ்ப்பேசும் மக்கள் போராட்டம் தொடங்கியதும் அரசாங்கம் ராணுவத்தை அனுப்பி அடக்கி ஒடுக்க நடவடிக்கை எடுத்ததுடன் தலைவர்களையும் பன்முறை சிறையில் வைத்தது.

இது தமிழ்ப்பேசும் மக்களுக்குப் பெரும் துன்பத்தைக் கொடுத்தது. இலங்கை மலைநாட்டு மக்களான தமிழ்த் தோட்டத்தொழிலாளர்களின், வாக்குரிமை குடியுரிமை பறிக்கப்பட்டு, மறுக்கப்பட்டது. சர்வதேச சட்டத்துக்கே முற்றிலும் மாருனதும் மாபெரும் துரோகமுமாகும்.

### வேறுநாடுகள் பற்றிக் குரல்

இதரநாடுகளில் அநீதிானய சம்பவங்கள் எதுவும் நிகழ்ந்துவிட்டால் உரிமைக்குரல் கொடுக்கும் திரு. நேருவின் தலைமையிலுள்ள இந்திய காங்கிரஸ் இலங்கையில் நடைபெறுவதைப்பற்றிக் குரல்கொடுக்கவில்லை.

### காமராஜர் ஆட்சி கவலைப்பட்டாலும்

இலங்கையில் தமிழ்ப்பேசும் மக்கள் படும் இன்னல்களை அறிந்து தமிழ்நாட்டில் காமராஜர் ஆட்சி கவலையுற்றிருந்தபோதிலும் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ளதால் வெளிப்படையாகக்குரல்கொடுக்கும் சக்தி அதற்கில்லை.

### ம. பொ. சியும் ராஜாஜியும்

இலங்கைத் தமிழ்ப்பேசும் மக்களின் இன்னல்கண்டு திரு.

(5ம் பக்கம் பார்க்க)

## யாழ் மேயர் பதவி 15-ந் திகதி

### மாநகரசபைக் கூட்டம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் மேயர் திரு எம் ஜேக்கப் மீது யாழ்ப்பாணம் மாநகரசபை நிறைவேற்றிய நம்பிக்கையில்லாத்தீர்மானத்தை உறுதிப்படுத்துவதற்கான கூட்டம் இம்மாதம் 15-ந் திகதி மாலை நடைபெறவிருக்கிறது.

இந்த உறுதிப்படுத்தும் கூட்டததை நிறுத்தி வைக்க கோரி நீதிமன்றத்தில் ஓர் மனுத்தாக்கல் செய்யப்படலாமெனவும் சொல்லப்படுகிறது.

## அல்ஜீரியாவில் 110 பேர் பலி

அல்ஜியர்ஸ், மே 3

அல்ஜீரியாவில் நேற்று ஏற்பட்ட சம்பவத்தில் 110 பேர் மாண்டனர். 120 பேர் காயமடைந்தனர். மரணமானவர்களில் 106 பேர் முஸ்லிம்கள். போர் நிறுத்த ஒப்பந்தத்திற்குப் பின்னர் ஏற்பட்ட மிகப் பெரிய சேதம் இதுவேயாகும்.

ஊரடங்குச் சட்டம், தீவிரமாக்கப் பட்டதுடன் மாலை எட்டரை மணி முதல் காலை ஆறு மணி வரை சகலவித போக்குவரத்துக்களுக்கும் தடைவிதிக்கப்பட்டன. நேற்று நடு ஜாமத்துக்குப்பின்னரும் மத்திய அல்ஜீரியரில், இயந்திரத் துப்பாக்கிகளின் வெடிச் சத்தங்கள் தொடர்ந்து கேட்டன.

## புதிய பாலம்

### பிரதமர் அடிக்கல் நாட்டினர்

கொழும்பு, வியாழன்

களனிகங்கையின்மீது ஹன்வெல என்ற இடத்தில் கட்டப்பட விருக்கும் பாலத்தின் அடிக் கல்லை, இன்று காலை பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா நாட்டினர். கல்நாட்டு விழாவில் பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் மந்திரிகள், மற்றும் பலரும் கலந்துகொண்டார்கள்.

இந்தப் புதிய பாலம் 1965-ம் ஆண்டுக்கு முன்னர் கட்டி முடிக்கப்படும் எனத் தெரிகிறது.

## தேயிலை விலை வீழ்ச்சி

கொழும்பு, வியாழன்

இவ்வாரம் தேயிலை விலை வீழ்ச்சியடைந்தது. உயர்ந்த பிரதேசப்பகுதித் தேயிலை தான் இதனுல் பாதிக்கப்பட்டன. ரஷ்யா வாங்காமல் விட்டதனுலேயே விலை வீழ்ச்சி ஏற்பட்டதாகக் கருதப்படுகிறது.

## இன்று

அளவெட்டி, வெள்ளி

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவிலில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்ற நாற்பதாவது தினமாகிய இன்று பகல் சங்காபிஷேகமும், மகேசர பூசையும் (அன்னதானமும்) நடைபெறும்.

## மேலைக் கரபபனில் திரு. கி. வா. ஜ.

### முருகமூர்த்தி ஆலயத்தில் அரிய பிரசங்கம்

கரம்பன், வியாழன்

மேலைக்கரம்பன் முருகமூர்த்தி ஆலயத்திலே, கரம்பன் சைவமகாசபை ஆதரவில் 'கலைமகள்' ஆசிரியர் வித்துவான் கி. வா ஜகந்நாதன், நேற்று இரவு 'கந்தர் அனுபூதி' என்னும் விஷயமாக ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்திஞர். தாம் பெற்ற இன்பத்தைப் பிறரும் பெறுதற்காக, அருணகிரிநாதர், நமது நெஞ்சமாகிய கனமான கல் நெகிழ்ந்து உருகுவதற்காக, கந்தர் அனுபூதியைப் பாடினுர் என்றும், அதை நாமும் பாட நாம் பக்தனுகி பின்னர் அவன் அருளால் முத்தனுகலாமென்றும் சுமார்

(8-ம் பக்கம் பார்க்க)

## தமிழரசுக் கட்சி பற்றி திரு. தொண்டமான் புகார்

### தி. மு. க. வின் பெயரை பயன் படுத்துகிருர்களாம்

சென்னை, மே 3

தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த சில அங்கத்தினர்கள் இலங்கையில் மலைநாட்டுப் பகுதிகளுக்கு வந்து தி. மு. க. வின் பெயரால் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிருர்களென்றும், சிங்களவர் மனதில் இது மிகுந்த சந்தேகத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளதென்றும் இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு, எஸ். தொண்டமான் நேற்று சென்னையில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

திரு. தொண்டமான் கனடாவில் மே 13-ம் திகதிக்கும், ஜூன் 6-ம் திகதிக்குமிடையில் நடைபெறவிருக்கும் இரண்டாவது காமன்வெல்த் தொழிற்சங்க மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக சென்னை வழியாகப் பம்பாய் சென்றுர்.

அரசியல் நடவடிக்கைகளில் இவ்வாறு ஈடுபடுபவர்கள் தமக்குத் தெரிந்தவர்கள் தானென்றும்,பெயரளவில் ஓரளவு ஒற்றுமை இருந்தபோதிலும், தமிழ் நாட்டிலுள்ள தி. மு. க. வுடன் இவர்களுக்கு சம்பந்தம் எதுவும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

மொழிப் பிரச்சினைபற்றி ஒரு சமயம், மிகுந்த தீவிர அபிப்பிராயம் கொண்டிருந்த ஏராளமான சிங்கள மக்கள், தற்போது தமிழர்களுக்கு அவர்களுடைய மொழியை மறுக்க முடியாது என்ற நிலைக்குத் திரும்பியிருக்கிருர்கள். வில்மட் பெரேரா,பி. பி. எஸ்.குலரத்ன போன்ற பிரபல சிங்கள அரசியல் வாதிகள் தமிழையும் ஆட்சி மொழியாக அங்கீகரிக்க வேண்டுமென்று கோரிவருகின்றனர்.

சமீப காலம்வரை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கும், தமிழரசுக் கட்சிக்குமிடையில் உறவு முறை சுமுக

8-ம் பக்கம் பார்க்க

# இளம்பிள்ளை வாத நோய்க்கு ஆயுர்வேத சிகிச்சை

## நிபுணர் கமிட்டி யோசனை

கொழும்பு, வியாழன்

**சுதேச மருத்துவ ஆஸ்பத்திரியில் இளம்பிள்ளை வாதத்துக்கு சிகிச்சை அளிக்க வசதிகள் செய்யப்படவேண்டுமென்ற 30 ஆயுர்வேத நிபுணர்கள் கமிட்டியின் அறிக்கையை சுதேச வைத்திய சபை ஏற்றுக்கொண்டிருக்கிறது.**

25 இளம் பிள்ளை வாத நோயாளிகளுக்கு தனி வார்டு ஒன்று திறக்கப்படவேண்டுமென அது சிபார்சு செய்திருக்கிறது.

இந்த அறிக்கை சுகாதார மந்திரியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. புதிய வார்டைத் திறப்பதற்கு காலதாமதமின்றி நிதி அனுமதிக்குமாறு மந்திரி கோரப்பட்டிருக்கிறார்.

இளம் பிள்ளை வாத நோய் ஆயுர்வேத சிகிச்சையின் மூலம் வெற்றிகரமாகத் தீர்க்கப்பட முடியுமென்றும், இதற்கான ஆயுர்வேத மருந்துகள் இருப்பதாயும் கமிட்டி தனது அறிக்கையில் கூறியிருக்கிறது.

ஏற்கனவே சிகிச்சைபெற்ற இளம் பிள்ளை வாத நோய்க்காரர் ஒருவருக்கு, ஆயுர்வேத முறையின்கீழ் சுலபமாக சிகிச்சை அளிக்க முடியும் என்றும் நிபுணர்கள் கமிட்டி கூறியுள்ளது.

செனட்டர் ஜி. பி. விக்ரம ஆராச்சி, திரு. எச். கே. புத்ததாஸ, திரு. டபிள்யூ. பி. ரணசிங்க, திரு. ஒவிட்டிகல குணசேகரா, திரு. டபிள்யூ. கே. சந்திரசேன ஆகியோர் இக்கமிட்டியிலுள்ள அங்கத்தினர்களில் சிலராகும்.

## ரஷ்ய போர்விமானம் இந்தியா வாங்குகிறது?

கராச்சி, மே. 3

சோவியத் யூனியனிடமிருந்து இரண்டு 'சுப்பர் சோனிக்' ஜெட் போர் விமானங்களை வாங்குவதற்கு இந்தியாவும் சோவியத் யூனியனும் ஒரு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளதாக பாகிஸ்தான் ரேடியோ இன்று தெரிவித்தது.


## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50 தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல பவியாகளுக்கும் நற்சாட்சிப்பத்திரக்திகளடங்கிய கற்றலோங் (Catalogue) இனும்.

வைத்தியர் பரிபூரணானந்தர். கைலாயபிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம்.



### தேவை

### தீவுப்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

**ஊர்காவற்றுறை**

மேற்படிசமாசத்திற்கு கொள்வனவு செய்வதற்கும், விகிதர் வேலை செய்வதற்கும் ஒருவர் பின்வரும் நிபந்தனைகளுக்கமைய தேவை. விருப்பமுடையோர் 20-5-62க்கு முன் மனுச் செய்யவும்.

வயது 30க்கும் 40க்கும் இடையிலுள்ளவராயும், வியாபார அனுபவமும், ஆங்கில அறிவு உடையவராயும் இருத்தல் வேண்டும்

சம்பளம் அடிப்படை ரூபா 140-00 — 190-00 / 8 × ரூபா 6-25

தற்காலிக ஜீவன சகாயப்படி அடிப்படைச் சம்பளத்தில் 50% பிணை ரொக்கம் ரூபா1000-00ம், ஆதனம் ரூபா 1500-00, உத்தரவாதப் பிணைப் பத்திரம் ரூபா 1500-00ம் கட்டவேண்டும்.

ஊர்காவற்றுறை, 3-5-62. க. பேரம்பலம் காரியதரிசி.


## கயரோகப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், வியாழன்

இலங்கை கயரோக நிவாரண தேசிய சங்கத்தின் வலிகாமம் மேற்கு கிளை நடத்திய கயரோகப்போட்டி முடிவுகள் வருமாறு –

### கயரோக கட்டுரைப் போட்டி

செல்வி மேரி. லெற்றிசியா அந்தோனிமுத்து, சில்லாலை மாதர் முன்னேற்றச் சங்கம், செல்வன் மு. பாக்கியநாதன், அராலி வடக்கு சனசமூகநிலையம், செல்வி ஆன். மேரி. செபஸ்தியாம்பிள்ளை, சில்லாலை மாதர்முன்னேற்றச் சங்கம்.

### கயரோகச்சித்திரப் போட்டி

செல்வி கோமதி கந்தையா தொல்புரம் மாதர் சனமூக நிலையம், செல்வி செல்வராணி. சுவாம்பிள்ளை, சில்லாலை மாதர் முன்னேற்றச்சங்கம், செல்வி எம்பிருசியா இம்மானுவேல், சில்லாலை மாதர் முன்னேற்றச் சங்கம்.

## மாண்டவர் மீண்டார்!

நுவரெலியா, வியாழன்

ஐயாக்கண்ணு என்ற 45வயதான ஒருவர் நுவரெலியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்என பொலிசார் பிரேத பரிசோதனை அதிகாரிகளுக்கு அறிவித்தனர். அவரது உடல் ஆஸ்பத்திரி சவச்சாலையில்கிடப்பதாகவும் கூறப்பட்டது. பிரேத பரிசோதனை அதிகாரி சவச்சாலைக்கு விஜயம்செய்தபோது உறவினரோ சாட்சிகளோ எவரும் இல்லை. இறந்தவரின் உடல்மட்டும்அங்கிருந்தது. அதைத் தொடர்ந்து மேலும் 2நாட்கள் ஒன்றும் நடைபெறவில்லை. பிரேத பரிசோதனை அதிகாரி, ஐயாக்கண்ணு வேலைசெய்யும் சம்மரீஹிப் தோட்டத் துரையுடன் இதுபற்றித் தொடர்பு கொள்ளுமாறு பொலிசாருக்கு அறிவுறுத்தினர். ஆனால் ஐயாக்கண்ணு ஏற்கெனவே தோட்டத்திற்குத் திரும்பிவிட்டதாய் துரை கூற, பிரேதப்பரிசோதனை அதிகாரிக்கு இது தெரிவிக்கப்பட்டது.

## இந்தியாமீது சீன குற்றச்சாட்டு

ஹாங்காங், மே. 3

நவசீன எல்லையில் சிங்சொங் பகுதியில் இந்தியப் படைகள் புதிதாக இரு இராணுவ நிலையங்களை அமைத்துள்ளதாகவும் இந்தியப்படைகள் ஆத்திரமூட்டும் செயல்களில் இறங்கியுள்ளதாகவும் சீன அரசாங்கம் குற்றம்சாட்டியுள்ளது.

# "பிரிவினைக்கு இலங்கையில் இடமில்லை"

## திரு. பத்திரான பேச்சு

குருநாகல், வியாழன்

"இலங்கையைப் போன்ற சுதந்திர நாட்டில் சாதி, மத, இன வேறுபாட்டிற்கு இடமில்லை." இவ்வாறு குருநாகல் எம். பி. திரு. ஜெயபத்திரான, திங்கட்கிழமை பிங்கிரியாவில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் பேசும்போது கூறினர்.

இந்தக் காலத்திலே கூட எல்லா இனங்களையும் ஒன்றுபடுத்தி சோசலிசத்தைத் தேடி ஒன்ருக அணிவகுத்துச் சென்ருல்தான் இந்நாடு முன்னேற முடியும் என அவர் மேலும் கூறினர்.

தொடர்ந்து பேசுகையில் அவர் கூறியதாவது: 'ஒன்பது வருடகாலமாக தொழிலாளர்களைச் சுரண்டிய யூ. என். பி. இப்பொழுது திரு. டட்லி சேனநாயக்காவின் தலைமையில் தொழிலாளர்களை தம் வசப்படுத்துவதற்காக அவர்களிடையே சிவப்புக் கொடி பிடித்திருப்பதாதத் தெரிகின்றது. இன்று தொழிலாளர்களிடையே யூ. என். பி.யால் காட்டப்படும் சிவப்புக் கொடிகள் யூ. என். பி. ஆட்சிக்கு வருமாயின் தொழிலாளரின் இரத்தம் தோய்ந்த வாளாக மாறும்.

**திரு. பத்திரான இக்கூட்டத்தின் பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்டார். திரு. கியூ. பெர்னன்டோ எம். பி., பிங்கிரிய எம். பி. திரு. எல். பி. ஜெயசேன ஆகியோரும் கூட்டத்தில் பேசினர்.**

## பத்திரிகையாளருக்கு உபசாரம்

புதுடில்லி, மே. 3

பத்திரிகையாளரிடம் விடைபெற்றுக் கொள்வதற்காக ராஷ்டிரபதி பதவியிலிருந்து விலகிக்கொள்ளும் டாக்டர் ராஜேந்திரபிரசாத் நேற்று பத்திரிகையாளர்களுக்கு ஒரு உபசாரம் நடத்தினர்.

## திருவண்ணமலை திருமுறை விழா

கொழும்பு, புதன்

திருவண்ணமலையில் நிகழவிருக்கும் திருமுறை விழாவில் கலந்து கொள்ளுமாறு குன்றக்குடி அடிகளார், ஈழத்திலுள்ள மூவருக்கு அழைப்பு விடுத்துள்ளார் எனத் தெரிகிறது. இம்மாதம் 14-ம் திகதி முதல் 19ம் திகதிவரை நடைபெறவிருக்கும் இத் திருமுறை விழாவில் இலங்கையிலிருந்து திரு. ஆ. கந்தையா, திரு. சத்தியதேவி துரைசிங்கம், வித்துவான் கனகசபை ஆகியோர் கலந்து கொள்வார்கள் எனத் தெரிகிறது.

## போர்ச்சுக்கீஸிய காவற்கைதிகள்

### லிஸ்பன் புறப்பட்டனர்

பம்பாய், மே 3

கோவா, டாமன்,டையூ ஆகிய பகுதிகளிலுள்ள போர்ச்சுக்கீஸிய காவல் கைதிகளை லிஸ்பனுக்கு கராச்சிவழியாகத் திருப்பி அனுப்பும் நடவடிக்கை நேற்று ஆரம்பமானது. 88 பேர் கொண்ட முதல் கோஷ்டி நேற்று பம்பாயிலிருந்து கராச்சிக்கு விமானத்தில் சென்றது. விமான நிலையத்திலிருந்து உடனடியாக கராச்சி துறைமுகத்தில் நின்ற போர்ச்சுக்கீஸிய கப்பலில் அவர்கள் ஏற்றப்பட்டனர்.

# வெளிநாட்டு பிரபல வழக்கறிஞர் வருவார்?

## அரசாங்கத்தின் சார்பாக சதி வழக்கை நடத்துவார்

கொழும்பு, வியாழன்

**அரசாங்கத்தைக் கவிழ்க்க சதிநடைபெற்றதாக நடைபெறவிருக்கும் வழக்கில், தனது சார்பாக ஆஜராக வெளிநாட்டுப் பிரபல வழக்கறிஞர் ஒருவரைக் கொண்டுவர அரசாங்கம் ஆலோசனை செய்துவருகிறது.**

இந்த விஷயம் மிகவும் கவனமாகப் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறதென்றும், அரசாங்கத் தரப்பில் வழக்கை அதிகத் திறமையாக நடத்த மிகவும் அனுபவமும் திறமையுமுள்ள ஒரு வழக்கறிஞர் அமர்த்தப்படவேண்டும்என்ற அடிப்படையில் அரசாங்கம் ஆலோசித்து வருவதாய்த்தெரிகிறது.

வெளிநாடுகளிலுள்ள சட்ட நிபுணர்கள் சிலருடன் இதுபற்றித் தொடர்புகொள்ளப் பட்டிருப்பதாயும், விரைவில் இதுசம்பந்தமாக ஒரு முடிவு ஏற்படுமென்றும் தெரிகிறது. ஜூன் முதலாம் வாரத்தில் வழக்கு விசாரணை ஆரம்பமாகும் எனவும் தெரிகிறது.

முடிக்குரிய சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஆனந்தபெரேரா, முடிக்குரிய வழக்கறிஞர் திரு ரோயல்டிட்டாவெல ஆகியோர் முடிக்குரியதரப்பில் ஆஜராகவிருக்கும் உள்நாட்டு வழக்கறிஞர்களாய் இருப்பார்கள். இவர்கள்தான் முடிக்குரிய வழக்கைத் தயாரித்தவர்களாகும்.

இதற்கிடையில் காவலில் வைக்கப்பட்டிருக்கும் 28பேர்களையும், அவர்களது நண்பர்கள் உறவினர்கள் ஆகியோர் ஒரு தடவையில் அரைமணி நேரம் பார்ப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

## வெலிமடையில் மக்கள் வங்கிகளை

### பிரதமர் திறந்து வைப்பார்

வெலிமடை, வியாழன்

வெலிமடையில் மக்கள் வங்கிக்கிளையொன்றை பிரதமர் திருமதி சிறிமா பண்டார நாயக்கா இம் மாதம் 5-ந் திகதி திறந்து வைப்பார். வெலிமடைத் தொகுதிக்கு உத்தியோக முறையில் முதல் தடவையாக விஜயம் செய்ய விருக்கும் பிரதமர் சிறிமா நகரமண்டபமைதானத்தில் நடைபெற விருக்கும் பொதுக்கூட்டத்திலும் பேசுவார்.

## கர்ப்பிணி தற்கொலை

வலப்பனை, புதன்

"பொது மக்களுக்கு கிருமிநாசினிகள் எளிதிற் கிடைப்பது வருந்தத்தக்கது. கிருமிநாசினியால் பல உயிர்கள் அழிந்தொழிகின்றன." இவ்வாறு கெத்துக்கண்டுறக் கிராமத்தைச் சேர்ந்த பண்டாரமெனிக்கா என்னும் 17 வயது யுவதியின் மரண விசாரணை முடிவில் மரணவிசாரணை அதிகாரி திரு. பி. எம். கருணரத்ன கூறினர்.

மரணவிசாரணையின் போது யுவதி கர்ப்பிணி எனத் தெரியவந்தது. கிராமத் தலைமைக்காரரும், பெற்றேரின் யுவதியும் சாட்சியமளித்தனர். தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.




# 'திராவிட நாடு கோரிக்கை புறக்கணிக்கப்பட்டதால் எழுந்தது'

## ராஜ்யசபை விவாதத்தில் திரு. அண்ணாத்துரை விளக்கம்

புதுடில்லி

தி. மு. க. தலைவர் திரு. சி. என். அண்ணாத்துரை இம்மாதம் 1ந்-திகதி ராஜ்ய சபையில் முதன் முதலாகப் பேசுகையில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டதாலேயே திராவிடநாடு கோரிக்கை எழுந்ததென்றும், சுயநிர்ணய உரிமையைப்பெறவே திராவிடநாடு கோரப்படுவதாகவும் இது யாரையும் விரோதிப்பதாகக்கணிக்கப்படக்கூடாதென்றும் எடுத்துரைத்தார்.

"தென்னகம் புறக்கணிக்கப்பட்டு வந்ததாலேயே திராவிட நாடு கோரிக்கை உதயமாகியது. வடநாட்டில் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலைகள் தென் நாட்டில் ஆரம்பிக்கப்படவில்லை. இந்தவகையான பாரபட்சமான மனப்போக்கு, வடக்கு ஏகாதிபத்தியததிலிருந்து பிரிந்து வாழவேண்டுமென்ற எண்ணத்தை எங்கள் இதயத்தில் உண்டுபண்ணியது.

### ஏளனம் ஒருமைப்பாட்டுக்கு உதவாது

ஆங்கிலம் தெரிந்த இந்தி அங்கத்தவர்கள் இந்தியிலேயே பேசினார்கள், இந்தி தெரியாத அங்கத்தவர்கள் இந்தி மொழியை அறிந்துகொள்ளும்வரை பேசாமல் இருந்துகொள்ளுங்கள் என்று ஏளனம் செய்வது போலிருந்தது இந்தச்செய்கை. இந்தவிதமானசெய்கை தேசிய ஒருமைப்பாட்டைவளர்க்க உதவுமா என நான் கேட்க விரும்புகிறேன்.

### பொறுப்புடன் நிறைவேற்றவில்லை

ஜனநாயகத்தைப் பொறுத்தவரையிலோ சோஷலிசக்கொள்கையிலோ, தேசியமயத் திட்டத்திலோ ஆட்சிபீடத்திலமர்ந்திருப்பவர்கள் பொறுப்புடன் தமது கடமையை நிறைவேற்றவில்லையென்றே நான் கூறுவேன்.

சுதந்திரம் கிடைத்தபின்னர் ஆளும்கட்சியினர் நடந்துகொண்டுவந்துள்ள விதத்தைப்பார்த்தால் ஜனநாயகம், தேசியம், சோஷலிசம் முதலியவைகளைப் பற்றியெல்லாம் புனராலோசனைசெய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாகத்தெரிகிறது.

### திராவிட நாடு உலகுக்கு உதவும்

திராவிடர்கள் தமக்கென்று தனியாக ஒரு ராஜ்யத்தை அமைத்துக் கொள்வதற்காகச் சுயநிர்ணய உரிமை கொடுத்தால் அதனால் அவர்கள் தமக்கே உரித்தான தனித்தன்மை வாய்ந்த கலாசாரத்தின்மூலம் அகில உலகிற்கும் தமது திறமையை உதவ முடியும்.

### எதிர்க்கும் நோக்கமல்ல

திராவிடநாடு' கோரிக்கை யாரையும் எதிர்க்கவேண்டும் என்ற அடிப்படையில் எழவில்லை. நாட்டைத் துண்டாடும் நோக்கமும் நமக்கில்லை. தட்சிண தீபகத்தில் இருப்பவர்கள் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் வட இந்தியாவிலுள்ளவர்களிலிருந்து மாறுபட்டவர்கள். திராவிடநாடு ஏற்பட்டுவிட்டால் ஒரு ராஜ்ய மக்கள் மற்றொரு ராஜ்யத்திற்குக் குடியேறுவது போன்ற பிரச்னைகள் ஏற்பட இடமில்லை.

இவ்விதம் திராவிடர்கள் தமக்கென ஒருராஜ்யத்தை அமைத்துக்கொள்ள இடமளிப்பதால் இது இந்தியாவின் அந்தஸ்தை உயர்த்துவதாகவிருக்கும்.

மனக்குறைகளுடன் வாழும் பிரதேசங்களை மாற்றி அமைத்து சுயநிர்ணய உரிமை பெற்ற நாடுகள் இணைந்த ஒரு இடமாக இந்தியாவை ஆக்குங்கள். இதுவே எமது கோரிக்கை.

### புறக்கணிப்பு

உருக்காலைகள், புதிய ரயில் பாதைகள், எண்ணை சுத்திகரிப்பு நிலையங்கள், மற்றும் பெரிய தொழிற்சாலைகள் விஷயத்தில் தென் இந்தியா புறக்கணிக்கப்பட்டுள்ளது.

உருக்காலைக்குப் பதிலாக அந்த இலாகா மந்திரிப் பதவியை ஒரு தென்னிந்தியருக்குக் கொடுத்திருக்கிறீர்கள் இது ராஜதந்திரமா? புத்திசாலித்தனமா? சாமர்த்தியமா? இந்த பிரித்தாளும் கொள்கையைத் தான் பிரிட்டிஷாரும் அப்பொழுது கையாண்டனர்.

### சமசந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டதா

சோஷலிசம் என்றால் பொது நலசேவையை மட்டும் கவனிப்பதல்ல. எல்லோருக்கும் சம உரிமையும் வழங்கப்படவேண்டும். பின் தங்கிய வகுப்பு மக்களுக்கும் ஒதுக்கப்பட்ட சாதி மக்களுக்கும் சம சந்தர்ப்பங்கள் வழங்கப் பட்டதா?

### தேசிய ஒருமைப்பாடு ஆச்சரியமாக விருக்கிறது

சுதந்திரமடைந்து 15 வருடங்களுக்குப் பின்னர் தேசிய ஒருமைப்பாடுபற்றிப் பேசுவது ஆச்சரியமாக விருக்கிறது. தேசியத்தலைவர்களும் அரசாங்கமும் இதுவரை எடுத்துக் கொண்ட முயற்சிகள் பலிதமாகவில்லை என்று எடுத்துக் கொள்ளவேண்டுமா? மக்களெல்லாம் ஒன்று கூடினால் தேசம் உருவாகிறது. தேசம் உருவாகினால் பின் தேசிய ஒருமைப்பாடு எதற்கு? விரிவான சிந்தனை இல்லாமையே இதுவரை இருந்து வரும் இந்த விளக்கமற்ற நிலைக்குக் காரணம்.

### திராவிடன் என்பதில் பெருமை

நான் திராவிடன் எனக் கூறிக்கொள்வதில் பெருமைப் படுகிறேன். இப்படிக் கூறிக்கொள்வதால் நான் வங்காளி, குஜராத்தி அல்லது மகராஷ்டிரனது விரோதி என்பது அர்த்தமல்ல. திராவிடர்களுக்கு ஒரு தனித்தன்மை வாய்ந்த பண்பு இருக்கிறது. அவர்களுக்குத்தமக்கென சுயநிர்ணய உரிமைவேண்டும்.

புதுடில்லியில் எனக்களிக்கப்பட்ட அன்பான உபசரிப்பு இந்தி ஏகாதிபத்திய வாதிகளின் விரோதத்தைக்கூட மறக்கச் செய்துவிட்டது. இவ்விதம் நான் மகிழ்வடைந்தாலும் விஷயமளவில் எமது நாடு புறக்கணிக்கப்பட்டுள்ளது என்பதை சுட்டிக்காட்டவே விரும்புகின்றேன்.

### நிதானம் வேண்டும்

ஜனநாயகத் தலைவர் (திரு. நேரு) திராவிட நாடு கோரிக்கை சம்பந்தமாக நிதானமாக நடந்துகொள்ள வெண்டுமென நான் கேட்டுகொள்கின்றேன்.

# மால்டாவில் மீண்டும் கலகம் என்ற செய்திக்கு மறுப்பு

புதுடில்லி, மே 3

மேற்கு வங்காளத்திலுள்ள மால்டா என்ற பகுதியில் மீண்டும் இனக் கலவரம் ஏற்பட்டுள்ளதாக பாகிஸ்தானில் செய்திகள் வெளியாகியிருப்பதை இந்திய வெளிவிவகார அமைச்சு அதிகாரியொருவர் தெரிவித்தார்.

மால்டாவில் சென்ற மாதம் 20-ந் திகதி முதல் அமைதி நிலவிவருவதாகவும் அங்கு வேறு அசம்பாவிதங்கள் எதுவும் நிகழவில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

மேற்கு வங்காள கவர்னர் திருமதி பத்மஜா நாயுடு, மால்டா பகுதிக்குச் சென்று சுற்றிப் பார்வையிட்டுத் திரும்பியுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

மால்டா பகுதியிலுள்ள முஸ்லிம் குடும்பங்களை எல்லைக்கப்பாலுள்ள உறவினர்கள் வந்து பார்த்து சுகம் விசாரித்துச் செல்வதாக மால்டா பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளதாகவும் அங்கு அமைதி நிலவாவிடில் இது சாத்தியமில்லையென்றும் வெளிவிவகார இலாகா அதிகாரி கூறினர்.

மால்டாவிலிருந்து கிழக்குப் பாகிஸ்தானுக்கு முஸ்லிம்கள் பெயர்ந்துவருவதாக கூறப்பட்ட செய்திகளை அந்த அதிகாரி மறுத்தார்.

மால்டாவிலிருந்து பாகிஸ்தானுக்குப் பெயர்ந்து சென்ற குடும்பங்களின் பெயர் விபரங்களை வெளியிடும்படி மேற்கு வங்க அரசாங்க காரியதரிசி கிழக்குப் பாகிஸ்தான் அரசாங்கக் காரியதரிசிக்கு எழுதியதாகவும் அதற்குப் பதில் கிடைக்கவில்லையென்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

# யாழ்ப்பாணம் எம். பி. இவ்வார இறுதியில் இலங்கை திரும்புவார்

ரோமாபுரி மே. 2

ஐரோப்பிய சுற்றுப்பிரயாணத்தை மேற்கொண்டிக்கும் யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஏ. டி. துரையப்பா கடந்த மாதம் 28-ம் திகதி ரோமாபுரியில் பாப்பாண்டவரைச் சந்தித்து சுமார் 6 நிமிஷம் வரை உரையாடினர். போப்பாண்டவர் தமது ஆசீர்வாதத்தைத் தெரிவித்தார்.

இன்று இங்கிருந்து கராச்சிக்குச் செல்லும் இவர் பாம்பாய்க்கும் விஜயம் செய்து விட்டு இவ்வார இறுதியில் இலங்கை திரும்புவாரெனத் தெரிகிறது.

# இமாசல பிரதேசம் காங்கிரஸ் வெற்றி

புதுடில்லி, மே 3

இமாசலப் பிரதேசத்திலிருந்து பார்லிமெண்டுக்கு நடைபெற்ற தேர்தலில் இது வரை மூன்று முடிவுகள் வெளியாகியுள்ளன. இந்த மூவரும் காங்கிரஸ் அபேட்சகர்களாவர். பிரதேச சபைக்கு நடைபெற்ற தேர்தலில் காங்கிரசுக்கு 34 ஸ்தானங்களும் சுதந்திரக்கட்சிக்கு 4 ஸ்தானங்களும் கிடைத்துள்ளன. ஜனசங், குடியரசு, பிரஜா சோஷலிஸ்ட் கட்சிகளுக்கு ஒரு ஸ்தானம் கூடக் கிடைக்கவில்லை.

# ஹமர்ஷீல்ட் மரணம் பற்றிய மர்மம்

## ஐ. நா. கமிஷனும் தெளிவாக்கவில்லை!

ஐ. நா. மே. 3

காலம்சென்ற ஹமர்ஷீல்டின் மரணம் சம்பந்தமான மர்மம் என்ன என்பதை ஐ. நா. பொதுச்சபை விசாரணைக் கமிஷனும் சரியாக வெளியிடப்படவில்லை ஆயினும், ரொடீஷிய அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுத்திருந்தால் குறைந்தது ஒரு உயிரையாவது காப்பாற்றியிருக்க முடியும் எனக் கூறியுள்ளது.

விமான விபத்துக்குள்ளான 16 பேர்களில் ஒருவரான சார்ஜண்ஞ் ஹரோல்ட் ஜூலியன் விமானத்தின் அருகே கடும் ஆபிரிக்க வெயிலுக்கடியில் பலமணிநேரம் உயிருடன் கிடந்தார். ஒருநாளைக்குப் பின் அவர் ஆஸ்பத்திரியில் மரணமானர். ரொடீஷிய அரசாங்கம் மீட்புவேலையில் தாமதம் காட்டியது எனக் கமிஷன் அறிக்கை கூறியது. தாமதமின்றேல் ஜூலியனின் உயிர் காப்பாற்றப்பட்டிருக்கும் என அறிக்கை கூறியது. ஒருஉயிர் காப்பாற்றப்பட்டிருப்பதுமட்டுமன்றி, விபத்துக்கான காரணமும் உடனடியாகச் சோதனை நடத்தியிருந்தால் தெளிவாகத் தெரிந்திருக்கும். சுவீடன், சீராலியோன், அர்ஜன்டைனா, நேபாளம், யூகோஸ்லேவியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த வழக்கறிஞர்கள் இந்தக் கமிஷனில் அங்கம் வகித்தனர். ஹமர்ஷீல்டின் விமானத்துடன் தொடர்பு அற்றுப்போய் 10 மணி நேரத்திற்குப் பின்பே ராயல் ரொடீஷிய விமானங்கள் அதைத் தேட ஆரம்பித்தன. திரு. ஹமர்ஸீல்ட் என்டோலாவில் இறங்கி திரு. ஷோம்பேயுடன் பேசத் திட்டமிட்டிருந்தார்.

விமானம் எங்கிருக்கிறது எனத் தெரியவில்லை என முதலாவது அடையாளம் கொடுக்கப்பட்டபின், என்டோலா விமான நிலைய மனேஜர் படுக்கைக்குப்போய்விட்டார். அதன் பின் அவரை எழுப்பி, ஒரு பொலிஸ் அதிகாரி வானத்தில் ஒரு ஒளியைக் கண்டதாகக் கூறியபின்பும் அவர் படுக்கைக்குச் சென்றுவிட்டார்.

லியப்போல்ட்வில்லியிலுள்ள பிரிட்டிஷ் தூதரினல் ரொடீஷியா - நியூஸிலாந்து சம்மேளனத்திலுள்ள ஹைகமிஷனருக்கு அனுப்பப்பட்ட ஒரு சைகை அடையாளம் பற்றி விமானநிலைய மனேஜருக்குப் போதுமான தகவல் கொடுக்கப்படவில்லை என்றும் அறிக்கை கூறுகிறது.

# பெரோன் ஆதரவாளர்கள் பதவி ஏற்க முடியவில்லை

## துருப்புக்கள் தடுத்து நிறுத்தின

புவனஸ்அயர்ஸ், மே 3

பெரோன் ஆதரவாளர்களான கவர்னர்களையும் மாகாணப் பிரதிநிதிகளையும் பதவி ஏற்கவிடாமல் துருப்புக்களும், பொலிசாரும் தடுத்து நிறுத்தினர்.

கடந்தமார்ச்மாதம் 18ந்தேதி தேர்தலில்அநேக மாகாணசட்டசபைகளை பெரோன் ஆதரவாளர்கள் கைப்பற்றினர்.

அரசியலமைப்புச் சட்டப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளை துப்பாக்கிகள் அகற்றிவிட்டன என இக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான செனோர் அண்ட்ரிஸ் பிரேமினி கூறினர்.

புவனஸ் அயர்ஸ் மாகாணத்தின் கவர்னராக தெரிவுசெய்யப்பட்ட பிரேமினி, சட்டசபை திறப்புவிழாவின்போது தாம் நிகழ்த்தவிருந்த 20,000 வார்த்தைகளடங்கிய உரையை பத்திரிகைகளுக்கு அனுப்பினர்.

# பிரிட்டன்–ரஷ்யா வாக்குவாதம்

ஐ. நா. மே 3

வட ரொடீஷியா இவ்வாண்டு சுதந்திரம் அடையவேண்டும் என்ற யோசனைக்கு அங்கத்தினர்கள் வாக்களிக்கவேண்டுமென்று ரஷ்யா வற்புறுத்தியதின் காரணமாக ரஷ்யப் பிரதிநிதிகளும் ஐ நா.வில் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

# கரஞ்சியாவுக்கு ரூ. 1000 அபராதம்

ஜபல்பூர், மே. 2

முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் திரு. ஜே. பி. மிஸ்ராவிடம் கோர்ட் அவமதிப்பு குற்றம் புரிந்ததற்காக பிலிட்ஸ் பத்திரிகை ஆசிரியர் திரு. ஆர். கே. கரஞ்சியாவுக்கு மத்ய பிரதேஷ் ஹைகோர்ட் ரூபா 1000 அபராதம் விதித்தது.

# இறைச்சி விலை அதிகரிப்பு

## அரசாங்கத்தின்மீது நகரசபை குற்றச்சாட்டு

கொழும்பு, வியாழன்

கொழும்பில் ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சிகளின் விலை அதிகரித்துள்ளது. இறைச்சி விலை அதிகரிப்புக்கு கொழும்பு மாநகர சபை அதிகாரிகள் அரசாங்கத்தைக் குறைகூறியுள்ளார்கள்.

மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சிகளின் கட்டுப்பாட்டு விலை ருத்தல் ஒவ்வொன்றும் முறையே 95 சதமாகவும், ரூ. 2.25 சதமாகவும் இருந்தபோதும், கொழும்பு, நகரசபை மார்க்கட்டில் ரூபா 1.10 சதமாகவும், ரூ. 3.50 சதமாகவும் விற்கப்படுகின்றன.

கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாக விற்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டியது உணவு விலைக்கட்டுப்பாட்டு இலாகாவின் கடமை என மாநகரசபை அதிகாரியொருவர் கூறியுள்ளார். நகரசபையைச் சேர்ந்த சந்தை மேற்பார்வையாளர்களுக்கு இவர்கள்மீது நடவடிக்கையெடுக்க அதிகார மெதுவுமில்லையென்றும் அந்த அதிகாரி கூறியுள்ளார்.

நகரசபைஎல்லைக்குள் உள்ள வரிசெலுத்துவோர் பலர் இறைச்சிவிலை அதிகரிப்பு விஷயமாக நகரசபைக்கு ஆர்ப்பாட்டம் தெரிவித்துள்ளார்கள்.

# புதிய தலைவர்

கொழும்பு, வியாழன்

நெற்காணிச் சட்ட புனராலோசனைசபையின் புதியதலைவராக திரு. வீ. எஸ். குணவர்த்தன நியமிக்கப்பட்டிருக்கிறார். 10,000 விண்ணப்பங்களுக்கு மேல் இதுவரை கையாளப்படவேண்டியிருப்பதாயும், இது பற்றிபுதிய தலைவர்கவனிப்பார் என்றும் அறிவிக்கப்படுகிறது.

## மணி வாக்கு

"தனக்கு நல்லதை எல்லோருமே விரும்புகிறோம்! போதுமா? போதாது. பிறருக்கும் நல்லதை எண்ண வேண்டும். தன் பெண்டு தன் பிள்ளை என்ற அன்புடன் நின்றுவிடக்கூடாது."


# ஈழநாடு

EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு சித்திரை மீ 21 உ (4-5-62)


## ஆசிரியர் சங்கத்தின் நல்ல யோசனை

அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தார் பள்ளிக்கூடங்களில் மொழிப் பிரச்சினை தீர நல்லதோர் யோசனையைக் கூறியிருக்கின்றனர். சிங்களக் குழந்தைகள் தமிழ் கற்கவும், தமிழ் குழந்தைகள் சிங்களம் கற்கவும், ஆங்கிலத்தை இரு சார்பினருக்கும் கட்டாய பாடமாக்கவும் வேண்டுமென்றும் அரசாங்கத்தைக் கேட்டுள்ளனர். தேசியக் கல்விக் கமிஷன் வெளியிட்ட இடைக் கால அறிக்கையின் மீதே இந்த யோசனைகளை அவர்கள் தெரிவித்துள்ளனர். படிப்பிக்கும் தொழிலில் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களின் இக்கருத்துக்களை அரசாங்கம் அலட்சியப் படுத்தமுடியாது.

இந்த யோசனையை அரசாங்கம் அமுல்நடத்துவதாயின், நாட்டில் பெரிய மண்டையிடி அளிக்கும் மொழிப் பிரச்சினை வெகுவாகத் தீர்ந்து விடும். நாடெங்கிலுமுள்ள குழந்தைகள் யாவருக்கும் 3 மொழிகளிலும் பயிற்சி இருக்குமாயின், மொழியைப்பற்றிய சங்கடங்கள் அவர்களுக்கு இராது. சிங்களக் குழந்தைகள் தமிழும், தமிழ்க் குழந்தைகள் சிங்களமும் கற்க ஒழுங்கு செய்தால் இரு சார்பினருக்கும் வேற்றுமைகள் நீங்கவும் நல்லுறவு பலப்படவும் வழி பிறக்கும்.

தமிழா மட்டும் சிங்களம் கற்க வேண்டுமென்றும் சிங்களவர் தமிழ் கற்கத்தேவையில்லை என்றும், ஏற்பாடு செய்தால்தான், தமிழர் அதைத் தங்களுக்குப் பெரிய அவமதிப்பாகவும், தங்கள் சுயமரியாதைக்கு இழுக்கு என்றும் உணர்ந்து இந்த ஏற்பாட்டை எதிர்க்கிறார்கள். இவ்விஷயத்தில் பிடிவாத மனப்பான்மை காட்டாமல் ஆசிரியர் சங்கம் கூறியுள்ள யோசனையை அரசாங்கம் பரிசீலனை செய்து ஏற்றால், இதுபற்றி அரசாங்கத்தின் மண்டை இடியும் குறையும்.

ஒரு மாணவர் மூன்றுமொழிகளையும் கற்க முடியுமா? என்ற கேள்வி எழலாம். பிரிட்டன் முதலிய இடங்களில், நான்கு மொழிகள்கூட மாணவருக்குக் கற்பிக்கப்படுகின்றன. அதுவும் சிறிய இலங்கையிலே இரு சமூகத்தினரும் இவ்விரு மொழிகளை [illegible] அங்கீகரித்து [illegible] கற்றுக் கொள்வது கஷ்டமல்ல. அதிகமான மொழிகள் தெரிந்தவருக்கு வாழ்க்கையிலே அதிக நண்பர்கள் கிடைக்கவும் இதனால் நல்ல வாய்ப்புகள் ஏற்படவும் உதவுவதாகும்.

இன்று பல கல்விஸ்தாபனங்களிலும், மொழி காரணமாக மாணவர்கள் கூறுபடுத்தப்பட்டு வருகின்றனர். தேசிய சமூக ஒற்றுமைக்கு இது ஆபத்தாகும். மூன்று மொழிகளும் எல்லாப் பள்ளிகளிலும் கற்பிக்க ஒழுங்கு செய்தால், எந்தப் பள்ளியிலும் மாணவர்கள் சேர்ந்து படிக்கவும் அவர்களிடையே நல்லுறவு பலப்படவும் முடியும்.

இந்த நல்ல யோசனைக்கு செவிசாய்த்தால், தங்களுக்கு அடுத்த தேர்தலில் ஆதரவு கிடைக்காதோ என்று அரசாங்கக் கட்சியினர் அஞ்சத் தேவையில்லை. பொது மக்கள் சமூக அமைதியையும் சமரசத்தையுமே விரும்புகின்றனர். மொழிப்பிரச்சினையை நீடிப்பதால் நாட்டின் முன்னேற்றம் எப்படித் தடைப்பட்டு வருகின்றதென்பதை அரசாங்கம் உணர்ந்திருக்க வேண்டும். ஆகவே துணிச்சலுடன் அரசாங்கம் ஆசிரியர் சங்கத்தின் இந்த யோசனையை ஏற்று நாட்டின் முன்னேற்றத்துக்கும் வழி செய்யக் கடமைப்பட்டுள்ளது.

இன்று சிறுத்தொண்டர் தினம்

# வாளால் மகவு அரிந்து ஊட்டிய வள்ளல்

—க. வை. ஆ. சர்மா—

திருச்செங்காட்டங் குடியிலே மன்னருக்குப் படைத் தலைவராகக் கடமை பூண்ட பரஞ்சோதியார் உவமையற்ற போர்த்திறமை கொண்டிருந்த காரணம் அவர் நியதியாகச் செய்துவரும் சிவதொண்டே என்பதை அறிந்தான் மன்னன்; அறிந்தது முதலாக அவருக்கு விடுதலையளித்து, அவர் சிவனடியாருக்குத் தினமும் திருவமுது முன்னூட்டிப் பின் உண்ணும் திருதொண்டைத் திறம்படச் செய்தற்கு வேண்டிய நிதிக்குவையும், விருத்தியும் அமைத்து வேண்டிக் கொண்டான். மன்னனிடம் விடைபெற்ற பரஞ்சோதியார் தமது திருத்தொண்டுக்கு உதவியாகத் திருவெண்காட்டு நங்கையாரை மணந்து கொண்டு இல்லறம் மேற்கொண்டபோது சிவபிரான் திருவருளால் சீராளதேவர் என்னும் மகவைப்பெற்றார். அவர்செய்துவரும் சிவதொண்டு நியதி தவறாது நிகழ்ந்தமையை இறைவன் உலகுக்கு உணர்த்திப் பரஞ்சோதியாருக்கு உய்திகொடுக்கத்திருவுளங் கொண்டார்.

திருஞான சம்பந்தப் பெருமான் தலயாத்திரையாகத் திருச்செங்காட்டங்குடியிலுள்ள கணபதீச்சுரத்துக்கு எழுந்தருளியபோது சிறுத்தொண்டர் செய்துவரும் சிவப்பணியைச் சிறப்பித்து,

"பைங்கோட்டு மலர்ப்புன்னை
பறவைகாள் பயப்பூரச்
சங்காட்டந்தவிர்த்தென்னைத்
தவிராநோய் தந்தானே
செங்காட்டங் குடிமேய சிறுத்
தொண்டன் பணிசெய்ய
வெங்காட்டுள் அனலேந்தி
விளையாடும் பெருமானே"

எனத் தாம்பாடிய திருப்பாசுரத்தில் அமைத்துள்ளார். இவ்வாறு சங்கமப்பணியினால் சிறப்புற்ற சிறுத்தொண்டரை ஆட்கொள்ளத் திருவுளங்கொண்ட கைலாசபதியானவர் தாமுமே ஒரு சங்கமராக (சிவனடியாராக) வடதேசத்துப் பைராகிகள் எனப்படும் பைரவத்திருக்கோலங் கொண்டார்.

இறைவன் சோதனை போல அன்று சிவனடியார் எவரும் அமுதுசெய்ய வரவில்லை. தமது திருத்தொண்டுக்கு முட்டு நேர்ந்ததே எனக் கலங்கிய சிறுத்தொண்டர் சிவனடியாரைத் தேடி அழைத்துவர வெளியே சென்ற சமயம் பைரவர் மனைக்கு வந்தார். அது கண்ட அம்மையார் அவருக்கு இருக்கை உதவி அமரும்படி வேண்ட அதனை மறுத்த அடியார் கணபதீச்சுரத்திருக் கோவிலில் தங்கியிருப்பதாகக் கூறிப்போய் விட்டார். மீண்டு வந்து அதனை அறிந்த சிறுத்தொண்டர் அங்கு வந்து பைரவரை வணங்கித் தமது மனைக்கு எழுந்தருளித் திருவமுது செய்யும்படி வேண்ட பைரவா சொல்லுகின்றார். "நீரோ பெரிய சிறுத்தொண்டர், ஆயினும், எமது நிபந்தனைப்படி திருவமுது செய்விக்க உம்மால் முடியாது" என்றார். அதனைக் கேட்டு வருந்திய தொண்டர், "சுவாமி! நிபந்தனை எதுவாயினும் அடியேன் நிறைவேற்றத் திருவருள் துணை நிற்கும், சொல்லியருளுக" என்றார். அடியார் கூறுவார்:- "தவ ஒழுக்கம் பூண்டயாம் வருடத்தில் இருமுறை மாத்திரம் சித்திரைப் பரணிதினத்திலும், ஐப்பசிப் பரணிதினத்திலும் அமுது செய்வோம். இது யாம் அநுட்டிக்கும் பைரவ விரதமாகும். நரபசுவே கறியாக அமையவேண்டும்.

ஒருதாய்க்குஒரே மகன். அங்ககுறைவற்ற ஐந்து வயதுப் பிராய முள்ளவனைப் பெற்றதாய் மனங் கோணாதபடி பிடித்துக்கொள்ளத் தந்தை முழுவிருப்பத்தோடு அரிந்து கறியாக்கிப் படைக்க வேண்டும். இதுவே எம் நியதி எனக் கூறியருளினார். இதனைக் கேட்ட தொண்டர், எம்பெருமான் அமுது செய்யப் பெறில் அடியேனுக்கு இதுவும் அரியது அன்று என்று கூறி அநுமதிபெற்றுச் சென்றார்.

மனையிடத்து நாயனார் வரவை எதிர் நோக்கி நின்ற பத்தினியார் தமது நாயகரிடம் அடியார் இட்ட நிபந்தனைகளை அறிந்து கூறுவார். "எத்துணை நிதிகொண்டேனும் ஒரு புதல்வனை நிபந்தனைப்படி விலைக்கு வாங்கிக்கொள்ளலாம். ஆனால் பெற்றதாய் மனங்கோணாதபடி பிள்ளையைப் பிடித்திருக்கப் பிதா அரிவது என்று தான் விலைக்குப் பெறமுடியாச் செயலாயிற்றே, என்ன செய்யலாம்?" என்றார். அதற்கு நாயனார் எம் இருவரைத் தவிர இச்சிவதொண்டுக்கு வேறு எவரும் உதவார் எனக்கூறினார். அதனை உணர்ந்த அம்மையார், "எம்பிரான் திருத்தொண்டர் "இதனால் இன்று திருவமுது செய்யப்பெறின இதை விடயாம் பெறுந்தவப் பேறு வேறும் உளதோ! ஆதலின், எம்மைக்காக்க வரும் குலமணியைப் பள்ளியிற் சென்று அழைத்து வரவேண்டினார். அவ்வாறே சீராளதேவனை நாயனார் அழைத்து வந்தார். உலகை வென்ற தாய் தந்தை இருவரும் குழந்தை இருவரும் குழந்தைக்கு மஞ்சன மாட்டினர்; கோலஞ் செய்தனர், தனியிடத்துக் கொண்டு சென்று தாய் மடியிற் கிடத்திக் கால்களை பிடித்துக்கொள்ள அரும்புகழ்த் தந்தை, சீரான தேவரின் தலையை அரிந்து உடலைக் கறிக்கு உதவினார்,

திருவமுது பாகஞ் செய்யப்பட்டதை அறிந்த சிறுத்தொண்டர் பைரவரை அழைத்து வந்தார். ஆசனத்து அமருவித்துக் கலந்திருத்தி அமுது கறிகளைப் படைப்பித்தார். கண்டு மகிழ்ந்த பைரவர் யாவும் குறைவறச் செய்தீரோ? என்றார். தலையிறைச்சி தவிர யாவும் பாகமாயிற்று என்றார். கேட்ட அடியார் "அதுவும் கூட யாம் உண்பது, கொண்டுவந்து படையும்" என்றார். அதனைக் கேட்ட தொண்டரும் மனைவியாரும் திகைத்து நிற்க, கூட நின்று உதவிச்செயல் புரிந்த சந்தனநங்கை எனுந் தாதி அதனையும் கொண்டுவந்து படைத்தார். சுவாமி! திருவமுது செய்தருளுக என வணங்கிநின்ற மெய்த்தொண்டரை நோக்கிய பைரவர், சிவனடியார் ஒருவரைக் கூடவைத்தன்றித் தாம் உண்ணும் வழக்கமில்லை என்றார். கேட்ட தொண்டர், "ஐயோ! கெட்டேன்! அடியார் அமுதுசெய்ய இடையூறு இதுவா!" என நொந்து புறத்தே சென்று தேடியும் அடியார் எவரையும் காணமையால் வந்து பைரவரை வணங்கி, "சுவாமி! அடியேனும் திருநீறு பூசும் அடியவனே, அமுதுசெயப் பணித்தருள்க" எனவேண்ட அதற்கு உடன்பட்டார்.

உடனே அம்மையார் கலந்திருத்தி அமுதுபடைக்கச்சிறுத்தொண்டரும் வேறுந் தடை நேராமுன் பைரவரை உண்பிக்கவேண்டித் தாமே அருகிருந்து உண்ணத் தொடங்கினார். உடனே பைரவர் அவரைத் தடுத்து ஆறுமாசங் கழித்து உண்ணும் யாமே பொறுத்திருக்க நேற்று உண்ட உமக்கு அவ்வளவு பசியா? நிறுத்தும் பிள்ளையில்லா வீட்டில் யாம் உணவு கொள்வதில்லை. அதனால் உமது பிள்ளையை உடனிருந்து உண்பதற்கு அழைத்துவாரும் என்றார். அது கேட்ட நாயனார் தடுமாற்றம் அடைந்து, "அவன் இப்போது உதவான்" என்று சொன்னார். கேட்ட பைரவர் நாம் இங்கு இப்போது உணவுகொள்ள வேண்டும் என நீர் விரும்பினால் எழுந்து புறத்தே போய் மகனை அழைத்துவாரும் எனப் பணித்தார். செய்வதறியாது தம்மனைவியுந் தாமுமாக நாயனார் புறத்தேபோய் நின்று "செய்யமணியே! சீராளா! மைந்தா! வாராய்! சிவனார் அடியார் யாம் உய்யும் வகையால் உடன்உண்ண அழைக்கின்றார்" என ஓலமிட்டனர்.

சீராள மைந்தன் பெற்றோர் முன் ஓடிவந்தான். வந்த பிள்ளையைப் பெற்றோர்உடனழைத்துக்கொண்டு விரைந்து உள்ளே வந்தனர். பைரவர் மறைந்தருளினார். சிறுத்தொண்டரும் மனைவியாரும் பைரவரைக் காணாது திகைத்து எங்குந்தேடியுங் கண்டிலர். பர்வதபத தினியம்மையார் பாகத்தேயமையவும் சரவணேத்பவராகிய குமாரப்பெருமான் மத்தியில் பொருந்தவும் கைலாசபதியானவர் சோமாஸ்கந்தமூர்த்தமாய் வெள்ளிய இடபத்தில் அமர்ந்து வானத்தில் காட்சிகொடுத்தார். இதனையே சேக்கிழார் பெருமான்:

"செய்யமேனிக் கருங்குஞ்சிச்
செழுங்கஞ்சுகத்துப்
பயிரவர் யாம்
உய்ய அமுதுசெய்பாதே
ஒளித்த தெங்கே?
எனத்தேடி
மையல்கொண்டு புறத்தணைய
மறைந்த அவர்தாம்
மலை பயந்த
தையலோடுஞ் சரவணத்துத்
தனயரோடுந்தாம்
அணைவார்"

என மிக அழகாகக் குறித்துள்ளார். சிறுத்தொண்டரும், மனைவியாரும், சீராளதேவரும், தாதியாகிய சந்தனநங்கையும் எம்பிரான் திருவடிநீழலையடைந்தனர்.

## ஐயாறன் எழுதுவது

இன்று யாழ்ப்பாண நகர மண்டபத்திலே அருமையான பரதநாட்டிய விருந்து காத்திருப்பதாயும் அதைத் தவற விடக்கூடாதென்றும் என் நண்பரொருவர் டெலிபோன் செய்தார். சென்னை அடையாற்று கலா க்ஷேத்திரத்திலே பல வருட காலம் இருந்து பயிற்சி பெற்ற குமாரி அம்பிகை நடராஜா பூரண கலைத் திறமையைப் பெற்று ஆடுவதாகவும், மற்ற எல்லாரையும் விட மிக நன்றாக இருக்குமென்றும், நடனத்திலே ஈடுபட்ட அந்த நண்பரே பெரிதும் புகழ்ந்தார். பிறகு வேறு இருகலை அன்பர்களும் இவ் விதமே சொன்னார்கள். இதை தட்டலாமா?

தமிழ்ப் பல்கலைக்கழக நிதிக்காக அம்பிகை வந்து பரதமாடுகின்றாராம். கலை ஆர்வம் மிக்கவர்கள் நம் யாழ்ப்பாண மக்கள். அவர்கள் இதற்கு அமோகமான ஆதரவு தருவார்களென்பதில் எனக்கு ஐயமில்லை. இதனால் அவர்கள் அரிய கலை இன்பம் பெறுவதுடன் தமிழ்ப் பல்கலைக்கழகம் மேலோங்கவும் நல்ல உதவி செய்து கொண்டவர்களாவர்கள்.

* * *

கரம்பன் முருகமூர்த்தி கோயிலுக்கு கி. வா. ஜ. அவர்களுடன் சென்றிருந்தேன். அழகான மூலஸ்தானர். அவரைத்தரிசித்ததும், கி. வா. ஜ. மெய்மறந்து பல பாடல்களைப் பொழிந்து தள்ளினார்கள். அவரது பக்தி உள்ளத்திலிருந்து கவிதை தானக ஊற்றெடுத்து வந்து கொண்டே உள்ளது. இதைப் பார்த்ததும், நமது நாயன்மார்களும், எப்படிப் பலகோவில்களிலேயும் தரிசிக்கையில், பல பதிகங்களையும் பாடியிருப்பரென்பதைக் கண்டேன். நல்லவேளை அவ்வப்போது அவற்றை எல்லாம் எழுதி வைத்தார்கள். இன்றேல் நமக்கு அந்தச்செல்வமெல்லாம் கிடைத்திருக்கமுடியுமா?

கி. வா. ஜ. அவர்கள் பாடுகையிலே அதையும் எழுத வேண்டுமென்று தோன்றியது. காகிதம், பேனா கொண்டு வருவதற்குள் நான்கு பாட்டுக்கள் முடிந்துவிட்டன. தரிசனம் முடிந்து வெளியே வந்தோம். அப்பாடல்களை எழுதிக் கொள்ள மீண்டும் பாடவேண்டுமென்று கேட்டதற்கு அது அத்துடன் முடிந்துவிட்டதென்றும், புதுப்பாடல் எழுதித்தருவதாயும் சொன்னார்கள்! அவர் பாடி எழுதிக்கொடுத்த பாடல் வருமாறு:-

கடம்பணிந்த திருத்தோளான்,
கருணைபொழி திருவிழியான்
கதிர்வேல் ஏந்தும்,
திடம்பரவும் பெருவீரன்
பிறவியெனும் பெரும்பிணியைத்
தீர்க்கும் ஐயன்
முடம்பரவும் மதியணிந்தான்
திருக்குமரன்
கரம்பநகர் முருகமூர்த்தி
இடம்பரவும் திருத்தாளை
எந்நாளும்
மறவாதார் ஏற்றம்கொள்வார்

* * *

அங்கு ஒரு மாமரம். மாவடுவைப்பற்றி பேச்சுவந்தது. உடன் வித்துவானின் உள்ளம், காஞ்சீபுரம் சென்றது. அங்கு அம்மை தழுவியதால் சுவாமிக்கு இரு வடுக்கள் ஏற்பட்டதை வைத்து ஓர் அழகான அம்மானைப் பாடலைப்

(ம் பக்கம் பார்க்க)

# "கொச்சைத் தமிழ் என்று நான் சொல்லவேயில்லை"

## தாயகம் திரும்பும் போது கி. வா. ஜ. விளக்கம்

யாழ்ப்பாணம், வியாழன்

'கலைமகள்' ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதனும், சித்தாந்தம் ஆசிரியர் திரு. ரா. முருகவேளும் இன்று காலை விமான மார்க்கமாக இந்தியாவுக்குப் பிரயாணமானார்கள். பலாலி விமானநிலையத்தில் இவர்களை பலர் வழியனுப்ப வந்திருந்தனர்.

அருள்நெறிக்கழகத் தலைவர் முதலியார் செ. சின்னத்தம்பி காரியதரிசி திரு. இ. க. வேலாயுதபிள்ளை ஆகியோர் உட்பட பல நண்பர்களும் அங்கு வந்திருந்தனர்.

யாழ்ப்பாணத் தமிழ் 'கொச்சைத் தமிழ்' என்று திரு. கி. வா. ஜகந்நாதன் அபிப்பிராயம் தெரிவித்ததாக வந்த செய்தியைப் பற்றி அவரிடம் பிரஸ்தாபித்தபோது திரு. கி. வா. ஜகந்நாதன் பின் கண்டவாறு தெரிவித்தார்:-

யாழ்ப்பாணத்தவருடைய தமிழ் கொச்சைத் தமிழ் என்று நான் எப்பொழுதும் எவரிடமும் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. அப்படி வந்திருந்தால் அது தப்பான செய்தியாகும். எவரையும் கண்டித்துப் பேசும் வழக்கம் என்னிடம் எப்பொழுதும் இல்லை. அன்பாகப்பழகுவதே எனது வழக்கம். அப்படியிருக்கையில் இப்படிக் கருத்துத் தெரிவித்திருப்பதாக வந்த செய்தி முற்றும் பிழையானதாகும்.

ஈழத்துச் சிறு கதைகளை இந்தியப் பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரிப்பதில்லை என்ற கேள்வியொன்றிற்குப் பதிலளிக்கையில் நான் தெரிவித்த கருத்தே பிழைபட வெளிவந்திருப்பதாக அறிகிறேன். "ஈழநாட்டு கிராமிய பாஷையை அடிப்படையாகக் கொண்ட சிறு கதைகளை அங்கு அதிகமானவர்கள் விரும்பிப் படிப்பதில்லை. இதனால் சிலவற்றையே பிரசுரிக்க முடிகிறது" என்று தெரிவித்திருந்தேன்.

---

# சாம்ராஜ்ய நலனை பாதுகாக்க உறுதி மொழி

## கானடா பிரதமருக்கு மாக்மில்லன், அறிவிப்பு

லண்டன், மே 3

பிரதம மந்திரி திரு. மாக்மில்லன் கெனடியின் பிரதமர் திரு. டீபன்பேக்கருடன் பேச்சுவார்த்தை நடத்தியபோது பிரிட்டன் ஐரோப்பா பொதுச் சந்தையில் சேர்ந்தாலும் சாம்ராஜ்ய நலனைப் பாதுகாக்க "உறுதி" கொண்டுள்ளது என்று கூறினர்.

ஒட்டாவாவில் பிரசுரிக்கப்பட்ட கூட்டு அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது:-

"கடந்த இரு நாட்களாகதிரு மக்மில்லனும் பிரதமர் டீபன்பேக்கரும் ஒட்டாவாவில் ஒன்று கூடிய ஐக்கிய அரசாங்கத்திற்கும் கனடாவிற்குமுள்ள சர்வதேச பொதுநலனைப்பற்றி திருப்பி ஆராய்ந்தனர். இக்கூட்டம் இவ்விரு பிரதமர்களும் அடிச்கடி நடத்திவரும் கூட்டங்களில் ஒன்ருகும்.

''திரு. மகமிலன், திரு. டீபன் பேக்கருடன் கிழக்கு மேற்கு தொடர்பு பேர்லின் பிரச்சினை, நிராயுதபாணி, அணுசக்திப் பரிசோதனை, முதலிய பற்றி திருப்பி ஆராய்தார். இரு பிரதமர்களும் அணுப்பரிசோதனையின் நிலைமையை மிக துக்கத்துடன் ஆராய்ந்ததோடல்லாமலும் ஜெனிவா மகாநாட்டில் ஒத்துழைப்பதாகவும், உறுதி கூறினர்.

"பிரதம மந்திரி மக்மிலன், மந்திரி டீபன்பேக்கருக்கு பிரிட்டனுக்கும் ஐரோப்பிய பொருளாதார சமுதாயத்திற்குமிடையில் நடைபெறும் பேச்சுவார்த்தையின் தற்போதைய நிலைமையைப்பற்றி அறிவித்ததோடு சாம்ராஜ்ய நாடுகளின் முக்கிய நலனை பிரிட்டன் பாதுகாக்குமெனவும் தெரிவித்தார்.

---

### அமெரிக்கா மீது காஸ்ட்ரோ குற்றச் சாட்டு

ஹவானா, மே 3

அமெரிக்கா தனது அரசாங்கத்தை வீழ்த்த முயற்சி செய்து வருவதாய் கியூபா பிரதமர் திரு. பிடல் காஸ்ட்ரோ மீண்டும் குற்றஞ் காட்டினர்.

பொருளாதார முட்டுக்கட்டையின் மூலம் அமெரிக்கா மறைமுக யுத்தம் தொடுத்திருப்பதாய் அவர் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசும்போது கூறினர்.

---

## இன்று உங்கள் பலன்

-சோதிடஆசான்செ.தெல்லியூர்-

சுபகிருது ஆண்டு சித்திரைத் திங்கள் 21ம் நாள் வெள்ளிக்கிழமை (4-5-62) ஹிஜ்ரி வருடம் 1381, துல்கஃதா28ம்பிறை.

இன்று பகல் 10-31 வரை அமாவாசை. பின்னர் பூர்வ பட்ச பிரதமை. இன்றிரவு9-55 வரை பரணி. அதன் பின்னர் கார்த்திகை. சித்தயோகம். இராகுகாலம் 10-26முதல்11-56 வரை.

இன்றுகாலை 10-31வரைதிருவோணம், அவிட்டம், சதயம் பூரட்டாதி, ரேவதி நட்சத்திரங்களுக்கும் பின்னர் திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம், மகம், பூரம் ஆகிய நட்சத்திரங்களுக்கும் படுபட்சி நாளாகையால் குறித்த காலத்தில் சுபகருமங்களை இவர்கள் மேற்கொள்ளுதலாகாது.

### இராசிப்பலன்

பரணி-கார்த்திகை: இவர்களுக்கு அன்பர் தொடர்பில் மதிப்புக்குறைதல், நல்லோர் தொடர்பால் மதிப்புஉயர்தல், பணவரவு, தொழிற் சிறப்பு, தாட்சண்ய செலவு ஆதியன காணப்படுகின்றன.

மேடம்: தொழில் நன்மை, பகைநீக்கம், செலவு, நல்லோர் நட்பு, தெய்வ வழிபாடு.

இடபம்: வாக்கு மேன்மை, வித்தைச் சிறப்பு, அலைச்சல், கடன்தொல்லை, போசன கஷ்டம்.

மிதுனம்: பிரயாணம், தொழிலபிவிருத்தி, வாகன கஷ்டம், அகாலபோசனம், சஞ்சலம்.

கடகம்: குடும்பசுகம், சந்தோஷம், கலைப்பயிற்சி, குடும்ப சிந்தனை, பணவரவு.

சிங்கம்: நல்லோர் நட்பு, மதிப்பு, நாணயவிருத்தி, தொழிற்சிறப்பு, அதிகஉழைப்பு.

கன்னி: அகாலஊணவு, ஞாபகமறதி, ஆடம்பரச்செலவு, கடன், பணமுடை.

துலாம்: ஆகாரக்கேடு, கௌரவமுறிவு, புத்தியால் வெற்றி, விவகாரசாதகம், நன்மை.

விருச்சிகம்: வாக்குவன்மை, உடல்[illegible] வெற்றி, குடும்பத்தல் சச்சரவு, மனக்கவலை, பணமுடை.

தனு: சுகநலம். போசனசுகம், வைத்தியச்செலவு, பிரயாணம், கவலை.

மகரம்: இனசனஉதவி, பணவசதி, பிரயாணசுகம், தொழில் வெற்றி, ஆதாயம்.

கும்பம் கடன்படல், உழைப்புக் கடுமை, பலன் குறைவு, வாக்குநன்மை, மதிப்பு.

மீனம்: வித்தைச் சிறப்பு, மனத்துணிவு, புகழ், குடும்ப சுகம், இனசன உதவி.

---

# தி. மு. க. உறவு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ம. பொ. சிவஞானகிராமணியும், ராஜாஜியும் தனிப்பட்ட முறையில் ஆதரவும் அனுதாபமும் தெரிவித்தனர். கட்சிரீதியில் நாம் தமிழர் கட்சித் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனும், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களும் இலங்கைத் தமிழர்களுக்காகப் பரிவு காட்டினர். திராவிட முன்னேற்றக்கழகம் கட்டுக்கோப்புடனுள்ளஒருபெரியஸ்தாபனம்.

திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ச்சியாக இலங்கை வாழ் தமிழ்ப்பேசும் மக்களுக்கு அனுதாபந் தெரிவித்து தொடர்ச்சியாக பொதுக்கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடத்தி இலங்கைத் தமிழ்ப் பேசும் மக்களின் உரிமைப் போராட்டங்களுக்குத் தார்மீக ஆதரவு அளித்து வந்தது. சமீபத்திய தேர்தலில் வெற்றி பெற்று தமிழ் நாட்டில் பலம் பொருந்திய எதிர்க்கட்சியாக விளங்கும் திராவிட முன்னேற்றக் கழகம் இலங்கைத் தமிழ்ப் பேசும் மக்களுக்கு தொடர்ந்து தார்மீக ஆதரவு அளித்து வருமென்பது உறுதி.

எமக்கு தார்மீக ஆதரவு தந்து வரும் திராவிட முன்னேற்றக்கழகத்தின் வெற்றியைபபாராட்டாமல் விடுவது நன்றி மறந்த செயலாகும்.

எம்மைப் பொறுத்தவரையில் பகைமை உணர்ச்சியை தூண்டி விடுவது எமது நோக்கமல்ல.

### இரகசிய ஒப்பந்தமில்லை

தி. மு. க. தேர்தலில் பெற்ற வெற்றியைப் பாராட்டி நான் அனுப்பிய வாழ்த்துச் செய்திக்கு தமிழரசுக்கட்சிக்கும் திராவிடமுன்னேற்றக் கழகத்துக்கும் இரகசிய ஒப்பந்தமிருக்கிறதென்றும் பணபலம் படைப்பலம் பெறும் நோக்கமுள்ளதென்றும் சிலர் தவருக விளக்கம் கூற முற்படுவது வருந்தத் தக்கது.

சுதந்திரப்போராட்டம் நடத்திய இந்திய, ஐரிஷ் மக்கள் ஆகியோர் வெளிநாடுகளின் ஆதரவைத் தேடவில்லையா? அல்ஜீரிய மக்கள் இன்றும் வெளியிலிருந்து பணம், படைபல உதவியையும் தார்மீக ஆதரவையும் பெறுகிருர்கள். எனவே பேசும் மொழியாலும் பண்பாட்டினுலும் ஒன்ருக உள்ள தமிழ்ப்பேசும் மக்கள், தமிழ்ப் பேசும் மக்களிடமிருந்து தார்மீக ஆதரவு பெறுவது எவ்விதம் தவருகும்.?

சிலர் கருதுவதுபோல் பொறுப்பற்ற முறையில்நான் தி. மு. க. தலைவருக்கு வாழ்த்துச் செய்திஅனுப்பவில்லை. ஆழ்ந்து சிந்தித்த பின்னரே வாழ்த்துச் செய்தி அனுப்பினேன்.

---

### இராசதுரை தலைமையில் மேதின விழா

மட்டக்களப்பு, வெள்ளி

தமிழரசுக்கட்சியின் மேதினக் கொண்டாட்டம் இன்று வெள்ளிக்கிழமை மாலை மட்டக்களப்பில் திரு. எஸ். இராஜதுரை தலைமையில் நடைபெறவிருக்கிறது.

---

# குழந்தைகளுக்கு சமயக்கல்வி அவசியம்

## சைவப் புலவர் மாநாட்டில் அறிஞர்கள் உரை

யாழ்ப்பாணம், வியாழன்

"புறச்சமயச் சூழலில் வாழும் சைவக்குழந்தைகளுக்கு சைவ சமயக்கல்வி அவசியம் வேண்டுவதாகும். அரசினர் கல்விப் பொதுத்தராதரப்பத்திரப்பரீட்சைக்குச் சமயப்பாடத்தைக்கட்டாயமாக்க விருக்கின்றனர். சலயமும் தமிழும் படிக்க வேண்டுவதன் அவசியத்தை மாணவர்கள் உணரும் காலம் வெகு தூரத்தில் இல்லை."

இவ்வாறு வித்துவான் வ. செல்லையா புதன்கிழமை மாலை வண்ணை நாவலர் வித்தியாசாலை மண்டபத்தில் அகில இலங்கைச் சைவப்புலவர் மகாநாட்டிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

வடபெரும்பாக உதவி வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரம் பேசுகையில் குறிப்பிட்டதாவது: அடுத்த வருடத்தில் சமயம் கட்டாயமாக்கப்பட்டு வரும். நூற்றுக்கு ஐம்பது விதமான பாடசாலைகளில் இன்னும் சமயக்கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. ஒருவன் அறிவு மட்டும் பெற்றுவிட்டால் போதாது. சமய வாழ்க்கையும் வேண்டும். சில காலமாக வேதாந்தமும், சித்தாந்தமும கலந்து இருந்தன. இதனுல் பிள்ளைகளுக்கு குழப்பம் ஏற்பட்டிருந்தது. சைவம் வளர்ந்தால் தமிழ் வளரும். தமிழ் வளர்ந்தால் நாடு வளரும். நாடு வளர்ந்தால் இன்பம் பெருகும். இதனை மனத்திற்கொண்டு சைவப்புலவர்கள் சமய போதனை புரிய வேண்டும்."

வித்துவான் கி. வா. ஜகந்நாதன் சமயக்கல்வி என்னும் பொருள் பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

நாம் கடவுளாகிய பெருஞ் சேதியைக் காண வேண்டுமானல் அதனை முதலில் உணர்ந்துகொள்ள வேண்டும். இறைவனை நினைக்கும்போது உள்ளத்தில் அமைதி வேண்டும்.

கருவியினுல் பயன் பெறுதல் முடியுமாயினும் அதற்கான முயற்சி எம்மிடையே இல்லை. இறைவனின் இயற்கைப் படைப்புகளை உய்த்துணர்ந்து அனுபவிக்கும் ஆற்றலும் இல்லை. நாம் சமயவாதிகளாக இராமல் சமயவாணர்களாக இருத்தல் வேண்டும். தனக்கும் துன்பம் வரும் என்பதனையும் மனிதன் எண்ண வேண்டும். ஒருவனுக்குச் சமய அறிவை விட சமய உணர்வு இன்றியமையாதது. சமய அறிவு தான்சமய உணர்வுக்கு அடி கோலுகிறது. சமய அறிவு முயற்சியுடையவனுக்கேயுண்டு.

உள்ள பொருளை நாம் உணர்ந்திட வேண்டும். உள்ள தனை உணர வைப்பது சமயக் கல்வி. நாம் உடலோடு உள்ளத்துடன் ஒட்டி வாழ்ந்தாலும் உயிருடன் ஒட்டி வாழ்வதில்லை.

எதனை அறியாவிட்டால் அறியாமை எம்மை விட்டு நீங்காதோ, அதே போல சமயக் கல்வி பெருமல் வாழ்ந்து காட்ட முடியாது.

எமக்கு இறைவனைச் சேர வேண்டும் என்கின்ற பசி உண்டாக வேண்டும். இந்தப் பசியை உண்மையான சமயக் கல்வி மூலம் உண்டாக்கி இறையருளால் குருநாதர்கள், அடிகள் என்பாரிடம் இறைவனை அறியும் சக்தியைப் பெற வேண்டும்.

வழக்கறிஞர் திரு. ஆர். என். சிவப்பிரகாசம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

நாம் இன்றைய நாளில் பல விதமான உரிமைகளையும் இழந்து தவிக்கின்ரேம். சமயத்தைத் தழுவியே எமது மொழி இருப்பதினுல் சமயத்தை வளர்க்கச் சைவப் புலவர்கள் முன்வர வேண்டும்.

அவர்கள் சைவ சாதனங்களுடன் கூடிய வாழ்க்கை வாழ்ந்து காட்ட வேண்டும்.

சைவப்புலவர் த. குமாரசுவாமிப்பிள்ளை பேசுகையில் கூறியதாவது:-

தம்மையும் நோக்கிக் கண்டு தகுதி என்னும் வேலியை வாழ்க்கைக்குக்கு அரணுக்கிக் கொளள வேண்டும். ஆத்மீகத் துறையில் வாழ்பவனுக்குக் கட்டாயம்," தகுதி என்ற வேலி வேண்டுவது அவசியமாகும்."

"சித்தாந்தம்" என்னும் பொருள்பற்றி புலவர் ந. ரா. முருகவேள் விரிவுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது:-

அறிஞர்களைச் சந்தித்து அவர்களுடன் தொடர்பு கொள்ளுதல் வாழ்க்கையின் பேறு ஆகும். சித்தாந்தம் என்பது தத்துவக் கொள்கைக்கு முரண்பட்டதல்ல. வேதாந்தத்தின் பிரிவு சித்தாந்தம், கடவுள் பக்தியும், ஒழுக்கமும் தொண்டின் திறனும் வாழ்க்கைக்கு வேண்டும். ஆராய்ச்சிகள் எமக்குள்ளே ஒருமைப்பாட்டை உருவாக்க வேண்டுமே தவிர பிரிவினையை ஏற்படுத்தக் கூடாது. பிறமதங்களை வெறுத்து ஒதுக்கித் தள்ளாமல் அவற்றில் உள்ள நல்லனவற்றை யெல்லாம் தன்னுள் அடக்கியிருப்பது சைவசித்தாந்தம். வாழ்க்கைக்கு மாறுபடாதது தமிழனின் நலம நிறை பிரஞானப்பிழம்பும்சைவசித்தாந்தமாகும.

திருவாளர்கள் கே. பி. ஹரன், ச. அம்பிகைபாலன் ஆகியோரும் பேசினர். பண்டிதர் இ. திருநாவுக்கரசு அனைவரையும் வரவேற்றுப்பேசினர். சைவப்புலவர் சச்சிதானந்தம் நன்றி கூறினர். பின்வரும் இரு பிரேரணைகளும் மகாநாட்டில் நிறைவேறியது.

### தீர்மானங்கள்

உயர்தர பாடசாலைகளிலும், பயிற்சிக்கலாசலைகளிலும் சைவப்புலவர் பட்டதாரிகளே சமய போதனசிரியர்களாக இருத்தல் வேண்டும்.

பட்டதாரிகளுக்குரிய சம்பளத்திட்டத்தில் சைவப் புலறர் பட்டதாரிகளும் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு பட்டதாரிகளுக்குரிய வேதனம் வழங்கப்படுதல் வேண்டும்.

---

### ஐயாறன்

(4-ம்பக்கத் தொடர்ச்சி)

பாடினர். கேட்கிறீர்களா? காஞ்சி ஸ்தலவிருட்சமும் மாமரம் தான்.

காமக்கனி நாதர் கச்சிப்
பெரும் பதியான்
மாமரத்தின் கீழிருந்து
வைகினர் அம்மானை
மாமரத்தின் கீழிருந்து
வைகினராமாயின்
ஆமவர்தாம் அங்கு வடுக்
கொண்டாரோ அம்மானை!
அழகு வடு ஓரிரண்டை அங்கு
கொண்டா ரம்மானை!

* * *

கச்சியே கம்பனே யென்றே
னுனே
கயிலாயா காரோணு
வென்றேனுனே
நிச்சன் மணுளனே யென்றே
னுனே
நினைப்பார் மனத்துளா
யென்றேனுனே
உச்சம் போதேறேறீயென்றே
னுனே
யுள்குவா ருள்ளத்தா
யென்றேனுனே
அச்சம் பிணி தீர்க்கும்
ஐயாறனே
யென்றென்றே நானரற்றி
நைகின்றேனே.

—திருநாவுக்கரசா

# அரசாங்க சேவையாளரின் உரிமைச் சட்டங்கள்

## திருத்தி அமைக்க கமிட்டி நியமனம்

கொழும்பு, வியாழன்

அரசாங்க சேவையாளர்களுக்கான "சட்ட விதிகள் மீது சில திருத்தங்களை ஏற்படுத்துவதற்கென அரசாங்கம் ஒரு கமிட்டியை நியமித்துள்ளது. வர்த்தக உணவுக்கப்பல் அமைச்சின் மேலதிக நிரந்தரக் காரியதரிசியான திரு. எச். ஈ. தென்னக்கோனின் தலைமையில் இந்தக் கமிட்டி நியமிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க சேவையாளர்களின் உரிமைகள், வேலைநிலைமைகள் பற்றி ஏற்கெனவே உள்ள சட்டவிதிகளை எவ்வாறு திருத்தியமைக்கலாம் என்பதுபற்றி இக்கமிட்டி அரசாங்கத்துக்கு சிபார்சுசெய்யும்.

ஸ்தாபனக் கட்டுப்பாட்டதிகாரி திரு. ஈ. ஜி. குணவர்த்தன, தொழில் உதவிக் கமிஷனர் திரு என். மகாதேவா, திரு. ஜி. யு. டி. வில்பிரெட் பெரேரா, திரு. டி. ஜி. கொன்சல்கோறளை, திரு. எச். நெல்சன் குணரத்ன ஆகியோர் இக்கமிட்டியின் ஏனைய அங்கத்தவர்களாவர்.

# ஈழத்து கவிஞர்கள் மன்றம் அமைத்தனர்

கொழும்பு, வியாழன்

கவிஞர் மன்றம் என்ற பெயரில் புதிய சங்கம் ஒன்று சென்ற திங்கட்கிழமை கொழும்பு நாவலர் மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

அகில இலங்கை தமிழ் எழுத்தாளர் பொது மகாநாட்டுக்கு இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து வந்த கவிஞர்கள் ஒன்றுகூடி இந்த மன்றத்தை ஸ்தாபித்தனர்.

மகாகவி, முருகையன் ஆகிய இளம் கவிஞர்களினால் இந்த அங்குரார்ப்பணக் கூட்டம் கூட்டப்பட்டது.

கவிஞர் மன்றத்தில் கலந்துகொண்ட இதர கவிஞர் வரிசை பின்வருமாறு:-

நவாலியூர் சோ. நடராசன், நாவற்குளியூர் நடராசன், நீலாவணன், அ. ந. கந்தசாமி, வ. அ இராசரத்தினம்(ஈழநாகன்), தமிழ்த்துமிலன், சில்லையூர் செல்வராசன், அண்ணல், மு. கணபதிப்பிள்ளை.

மூன்று மாதத்துக்கு ஒரு தடவை ஒரு கவிதைச் சஞ்சிகையோ அல்லது நூலோ வெளியிடுவது இம்மன்றத்தின் முக்கியமான நடவடிக்கையாக இருக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

மாதந்தோறும் கவிஞர்கள் ஒன்றுகூடி கவிதைகள் புனைந்து வாசிக்கும் முறையை அமுலுக்குக் கொண்டுவருவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இக்கவிஞர் மன்றத்தின் சட்டதிட்டங்களைத் தயாரிக்க மகாகவி, அ. ந. கந்தசாமி, முருகையன் ஆகியவர்களைக் கொண்ட ஒரு சபை நிறுவப்பட்டது.

# "வேலையில்லா திண்டாட்டத்தை கி.மு.சங்கங்கள்மூலம் தீர்க்கலாம்"

சாவகச்சேரி, வியாழன்

"நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் மிகவும் நெருக்கடியான சூழ்நிலையை வளர்த்து வருகிறது. கிராமமுன்னேற்றச் சங்க மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டும். அரசாங்கத்தை எல்லாவற்றிற்கும் எதிர்பாராமல் சுதந்திரமாகவும் பரஸ்பர மனப்பான்மையுடன் தொண்டாற்றி நாட்டை முன்னேற்ற வேண்டும்."

இவ்வாறு கரைச்சி, துணுக்காய் பகுதி கிராமமுன்னேற்றச்சங்க இரண்டாம் வருடாந்தக் கூட்டத்தில் அப்பகுதிக் காரியாதிகாரி திரு. ஏ. வி. விசுவநாதன் தலைமை வகித்து உரைநிகழ்த்துகையில் கூறினார்.

கைத்தொழில் பகுதி அதிபர் திரு. எஸ். ஈ. இராசரத்தினம் பேசும்போது கூறியதாவது:-

"கல்விளான் பகுதியில் பன்னவேலை செய்யக்கூடிய ஓர் வகைப் புல் வளர்கின்றது. அப்புல்லைக் கொண்டு பிற்போக்கான பகுதிகளில் கிராம முன்னேற்றச்சங்க மூலம் பன்னக்கைத்தொழிலை விருத்தி செய்ய முயற்சி செய்வேன். குடிசைக் கைத்தொழில் மூலம் மக்கள் ஓய்வு நேரத்தையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் போக்க முன்வர வேண்டும்."

பின்வரும் தீர்மானங்கள் சபையில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பெற்றன.

குஞ்சுப்பரந்தன் கிளிநொச்சி வரை பஸ்சேவை தொடர்ந்து நடைபெற வேண்டும். புத்துவெட்டுவான், வட்டக்கச்சி, முரசுமோட்டை ஆகிய பகுதிகளில் தந்திவசதி செய்ய வேண்டும். கிளிநொச்சி உப தபாற் கந்தோரைப் பெரிய தபாற்கந்தோராக்க வேண்டும். காட்டு விலங்குகளின் அட்டூழியத்தை நீக்கக் காட்டு நிலங்களை இராமநாதபுரம், வட்டக்கச்சிக் குடியேற்ற வாசிகளுக்குப் பகிர்ந்து கொடுக்க வேண்டும். குடியேற்றப் பகுதிகளில் மருத்துவ மாதர்களை நியமிக்க வேண்டும்.

# தொழில் நுட்பக் கல்விக் கமிஷன் பகிரங்க விசாரணை ஆரம்பம்

## மே 8-ல் வர்த்தகக் கலைமன்றம் சாட்சியமளிக்கும்

யாழ்ப்பாணம், வியாழன்

அகில இலங்கை வர்த்தகக் கலைமன்றம் இம் மாதம் 8-ம் திகதி இலங்கைத் தொழில் நுட்பக் கல்விக் கமிஷன் முன்னிலையில் வாய்மூலச் சாட்சியமளிக்க விருக்கிறது. இதற்காக கொழும்பிலுள்ள இக் கமிஷன் காரியாலயத்தில் இவர்களை அன்று காலை 9 30 மணிக்குச் சமுகமளிக்கும் படி கமிஷன் காரியதரிசி திரு. ஆர். விஜயசிங்கா சி. சி. எஸ். அறிவித்திருக்கிறார்.

இம் மன்றத்தின் சார்பில் சாட்சியமளிப்பதற்காக திரு. எம். சிவசிதம்பரம் எம். பி, திரு. வி. என். நவரத்தினம் எம். பி, ஆசிரியர் திரு. சோ. அமிர்தலிங்கம் மன்றக்காரியதரிசி திரு. எம். புவனேந்திரன், திரு. க. சிவசம்பு ஆகியோர் செல்லுகின்றனர்.

இலங்கைத்தொழில் நுட்பக் கல்விக் கமிஷன் இப்பொழுது தனது பகிரங்க விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. இக் கமிஷனில் திரு. டி. பி. எஸ். முனசிங்கா, (தலைவர்) டாக்டர் எஸ். ஞானலிங்கம், திரு. சி. என். ஈ. ஜே. டி மெல், திரு. ஏச். டபிள்யூ. வூட், திரு. ஏ. ஐ மக்கான் மரைக்கார், திரு. ஆர். விஜயசிங்க, (காரியதரிசி) ஆகியோர் இருக்கின்றனர்.

யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரியை சிரேஷ்டகல்லூரியாக உயர்த்த வேண்டும், தமிழிலும் வர்த்தகக்கல்வி போதிக்க வசதி செய்யப்பட வேண்டும், தமிழ் வர்த்தக ஆசிரியர்களை நியமிக்க வேண்டும். தமிழிலும் வர்த்தகப் பட்டதாரி வகுப்புகள் நடாத்தவேண்டும். ஆகிய பல கோரிக்கைகளை இம் மன்றம் தெரிவிக்குமெனத் தெரிகிறது.

# குப்பையைக்கிளறுவது சீர்திருத்தமாகாது

## எழுத்தாளர் கூட்டத்தில் பேச்சு

வேலணை, வியாழன்

"இலக்கியம் மக்களுக்கு இன்பத்தைத் தருவது. மக்கள் தமது துன்பத்தை மறந்து இன்பம் பெற இலக்கியமும் ஒருவழி. இவை இலக்கியத்தின் நோக்கம். இன்பத்தைத் தருவதே என்பதை வெளிப்படையாக உணர்த்துகின்றன. இலக்கியத்தின் அடுத்த நோக்கம்தான் சீர்திருத்தம். சமூகச் சீர்கேடுகளை வெளிப்படையாக சிறுகதை, நாவல் மூலம் புட்டுக்காட்டுவதால் சமூகம் சீர்திருந்திவிடாது. குப்பையைக் கிளறுவது சீர்திருத்தமாகாது. அதை மூடிவிடுவது தான் சீர்திருத்தம். இலக்கியத்துக்கு யதார்த்தம் முக்கியமல்ல. கற்பனைக்குத்தான் முக்கிய இடம் உண்டு. கற்பனை கலக்காத இலக்கியம் நயம் பயக்காது. யதார்த்தம்தான் இலக்கியம் என்றால், சரித்திரம் என்பது என்ன?

இவ்வாறு வேலணை ஊராட்சிமன்ற அலுவலகத்தில நடைபெற்ற தீவுப்பகுதி எழுத்தாளர்சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசிய கவிஞர் தில்லைச்சிவன் தமது பேச்சில் குறிப்பிட்டார். கூட்டத்திற்கு திரு. செ. சுப்பிரமணியம் தலைமை வகித்தார். அவர் மேலும் பேசியதாவது:

இலக்கியம் வாழ்க்கையின் வழிகாட்டி. சமூகத்தைச் சீர்திருத்துவது அதன் ஒரு நோக்கமெனினும் அதன் மூலம் முற்றாக வெற்றி பெறமுடியாது. சீர்திருத்தம் இன்றியமையாததே. அதற்காக ஒரேயடியாக சீர்திருத்துவோம் என்று தீவிரமாக இறங்கினால் பூரண வெற்றியடைய முடியாது. முற்போக்கு பிற்போக்கு என்று கட்சிப்பூசல்களுக்கிடைப்படாமல் நடுவு நிலைமையுடன் நின்று மக்களுக்கு வேண்டியதை எழுத வேண்டியது ஈழத்து எழுத்தாளர்கள் அனைவரினதும் கடனாகும்.

இந்நிலையத்தின் 12-வது, 13-வது ஆண்டு விழாவை விரைவில் கொண்டாடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

# திருநாவுக்கரசர் குருபூசை

நீர்வேலி, புதன்

நீர்வேலி ஸ்ரீவிநாயக சனசமூக நிலைய இந்து சமய விருத்திக் கழகத்தினரால், திருநாவுக்கரசர் குருபூசை நிலைய மண்டபத்தில் திரு. த. கணபதிப்பிள்ளை ஆசிரியர் தலைமையில் நடைபெற்றது. நிலையக் கழகத்தினரால் கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்றதோடு பிரசாதம் வளங்கப்பட்டது.

# சில்லறைசிப்பந்திகளுக்கு வேலை உயர்வு

## அரசாங்கத்தின் புதிய திட்டம்

கொழும்பு, வியாழன்

அரசாங்கத்தின் சகல சில்லறை சிப்பந்திகளையும் ஒரு ஒருமைப்பாட்டுத் திட்டத்தின் கீழ் கொண்டுவர அரசாங்கம் வழிவகுத்துள்ளது.

பல்லாயிரம் தொழிலாளர்கள், நகர சுத்தித் தொழிலாளர்கள், பியோன்கள், சுத்தம் செய்பவர்கள், செய்தி எடுத்துச் செல்பவர்கள், டெலிபோன் ஆப்ரேட்டர்கள் ஆகியோருக்கு வேலை உயர்வு அளிக்க இத்திட்டம் வகை செய்கிறது. பரீட்சார்த்தமாக முதலில் இது கொழும்பு முனிசிபல் எல்லைக்குள் அமுல் நடத்தப்படும்.

# பிரிவினை ஆசிரியர்களுக்கு பென்ஷன் சலுகை

கொழும்பு, வியாழன்

பிரிவினைப் பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களுக்கும் பாடசாலை அதிபர்களுக்கும் இனிமேல் பென்ஷன் உரிமை வழங்கப்படும்.

இவர்களுக்கு இந்தவசதியை ஏற்படுத்துமுகமாக, பாடசாலை ஆசிரியர்களின் பென்ஷன் உரிமைச்சட்ட விதிகளை மாற்றியமைப்பதென, நிதிமந்திரி திரு பீலிக்ஸ்டயஸ்பண்டாரநாயக்கா தீர்மானித்துள்ளார். பிரஸ்தாப ஆசிரியர்கள், தமது சம்பளத்தில் நூற்றுக்கு 4 வீதத்தைப் பென்ஷன் நிதிக்கு வ்ழங்கவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

1934 க்கு முன்னர் ஆசிரிய சேவையில் சேர்ந்துகொண்டவர்களுக்கு இந்தச் சலுகை வழங்கப்பட மாட்டாதெனத் தெரிகிறது.

# டிசம்பர் ஜி. ஸி. ஈ. பரீட்சை முடிவுகள்

## இம்மாத மத்தியில் வெளியாகும்

கொழும்பு, வியாழன்

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற ஜி. ஸி. ஈ. பரீட்சையின் முடிபுகள் இம்மாத மத்தியில் வெளியாகும் எனத் தெரிகிறது. பரீட்சை முடிபுகளை விரைவில் வெளியிடும் பொருட்டுத் தம் உத்தியோகஸ்தர்கள் இராப்பகலாகவேலை செய்து வருகிறார்கள் என பரீட்சைக்கமிஷனர் கூறினர். மே. 15ம் தேதிக்குமுன் பிரவேச ஜாபிதாக்கள் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பப்பட்டுவிடும் என பரீட்சைக்கமிஷனர் சகல தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவித்திருக்கிறார். பிரவேச ஜாபிதா மே 21ம் தேதிக்குமுன் கிடைக்காத பாடசாலைகள் 25ம் தேதிக்கு முன் அவைகளைக் கோர வேண்டும் எனவும் அவர் அறிவித்திருக்கிறார்.

# கப்பித்தாவத்தையில் மகாசங்காபிஷேகம்

கொழும்பு, வியாழன்

கொழும்பு மருதானை கப்பித்தாவத்தை (தீவு) ஸ்ரீபால செல்வ விநாயகமூர்த்தி கோவில் புனராவத்தன மகா கும்பாபிஷேகம் இம்மாதம் 6-ந் திகதி நடைபெறவிருக்கிறது.

# அச்சுவேலி தெற்கு சனசமூகநிலையம்

## நிர்வாகிகள் தெரிவு

அச்சுவேலி, வியாழன்

அச்சுவேலி தெற்கு ஸ்ரீவிக்னேஸ்வர சனசமூகநிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் திரு. இ. நாகராசா தலைமையில் நடைபெற்றபோது புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: திரு. க. செல்லத்துரை, உபதலைவர்: திரு. இ. கனகராசா, இணைக்காரியதரிசிகள்: திரு: நா. ஸ்ரீகாந்தன், திரு. இ. மகாதேவன, தனாதிகாரி: திரு சி. சிவக்கொழுந்து, விளையாட்டுக்கழகத் தலைவர்: திரு. பொ. தனபாலசிங்கம்.

9, பேர் கொண்ட நிருவாக சபை அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

மே மாதம் 2-ந் திகதி முதல் 12-ந் திகதி வரை

ஹான்ட்லூம்ஸ்

தாபனத்தாரின்

8-வது ஆண்டு விழா

கொண்டாடப்படுகிறது!

இந்த நாட்களில்

கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி, பதுளையிலுள்ள **ஹான்ட்லூம்ஸ்** தாபனங்களில் வாங்கும் ஒவ்வொரு பொருளுக்கும் 5 சத வீத கழிவுகொடுக்கப்படும்.

# "விவசாயி - தொழிலாளி அரசாங்கம் வேண்டும்"

## அரசாங்கத்தின் போக்குக்கு டாக்டர் என். எம். கண்டனம்

கொழும்பு, புதன்

"அரசாங்கம் பதவியிலிருப்பதற்காக அநேக கோணல் வழிகளை அனுஷ்டித்தது. ஆனால் எந்தக் கோணல்வழியும் எதிர்காலத்தில் பயன் தராது" என டாக்டர் என். எம். பெரேரா லங்கா சமசமாஜக்கட்சியின் மேதினக் கூட்டத்தில் பேசும் போது குறிப்பிட்டார்.

"நாட்டின் அபிவிருத்திக்கு அரசாங்கத்திடம் உருப்படியான திட்டம் எதுவும் இல்லை. அடுத்த பட்ஜட்டை அது சமர்ப்பிக்கும்போது மக்களின் தலையில் மேலும் பல கஷ்டங்கள் நிர்ப்பந்தமாகச் சுமத்தப்படும். சரியான சோஷலிஸ்ட் அரசாங்கமொன்றினால்தான் நாட்டின் பிரச்னைகளை தீர்க்க முடியும். தொழிலாளரும் விவசாயிகளும் ஒன்றுசேர்ந்து விரைவில் ஒரு விவசாயி-தொழிலாளி அரசாங்கத்தை நிறுவவேண்டும்.

தொழிற்சங்கத்தில் அரசியல் தலையிடுபற்றி பிரதமரும், தொழில் மந்திரியும் தங்கள் மேதினச் செய்தியில் குறிப்பிட்டிருந்தார்கள்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினால தொழிற்சங்கங்கள் ஆரம்பிக்கப்படுவது அரசியற் தலையீடு அல்லவா? என்றும் டாக்டர் பெரேரா வினவினார்.

## "அபிவிருத்தித் திட்டங்கள் தேவை"

### —திரு. டட்லி

கண்டி, புதன்

"யு. என். பி. அரசாங்கம் நிறுவிய அபிவிருத்தித்திட்டங்களின் பயன்களை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கம் இதுவரை தனது நன்மைக்காக உபயோகித்துள்ளது. இவ்வாறு செய்ததன்றி புதிய அபிவிருத்தித்திட்டங்கள் எவற்றையும் சுதந்திரக்கட்சி அரசாங்கம் தொடக்கி வைக்கவில்லை. மகாவலி, களனிகங்கை அபிவிருத்தித்திட்டங்கள் பற்றி இந்த அரசாங்கம் அதிகம் பேசிக்கொள்கிறது. ஆனால் அந்த இரு ஆறுகளும் முன்னர் ஓடிக்கொண்டிருந்த இடங்களிலேயே இன்னும் ஓடிக்கொண்டிருக்கின்றன."

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி வாலிபமுன்னணியின் இரண்டாவது ஆண்டு விழாவில் பேசுகையில் திரு. டட்லி சேனநாயக்கா கூறினார். வாலிபர்முன்னணியின் தலைவர் திரு. ஏ. சி. எல். ரத்வத்தை விழாவுக்குத் தலைமை வகித்தார்.

தொடர்ந்து பேசுகையில் திரு. சேனநாயக்கா கூறியதாவது:-

"நாட்டின் பொருளாதார நிலை குன்றிக் கொண்டே போகிறது. அபிவிருத்தித் திட்டங்கள் மூலமாகவே பொருளாதாரம் விருத்தியடையலாம். கடந்த 6 வருடங்களில் சனத்தொகை 18 லட்சம் அதிகரித்துள்ளது. யு. என். பி. ஆட்சியின்போது, அரசாங்கத்தின் குறை நிறைகள் பற்றிப் பேசுவதற்கு மக்களுக்கு சுதந்திரமிருந்தது. காலஞ்சென்ற பிரதமர் அவசரகாலச்சட்டத்தின் கீழ் 10 மாதக் காலமாக நாட்டை ஆட்சி செய்தார். திருமதி பண்டாரநாயக்கா 12 மாதங்களுக்கே அவ்வாறு ஆண்டுவிட்டார்.

---

வாஷிங்டன், மே 2

படைகுறைப்பை விரும்பாத அரசியல் வாதிகளை வானவெளிக்கு அனுப்பவேண்டும் என்றும், அங்கிருந்து பார்த்தால் இந்தப் பூமி எவ்வளவு சிறியது எனத் தெரிய வரும் என்றும் ருஷ்ய வானவெளி வீரர் டிட்டாவ் இங்கு கூறினார்.

## தாளையடி ச.ச. நிலையம் வருடாந்த விழா

யாழ்ப்பாணம், புதன்

தாளையடி சன சமூக நிலைய ஆண்டு விழாவும் விளையாட்டுப் போட்டியும் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

செம்பியன் பற்று கிராமச் சங்கத் தலைவர் திரு. சி. முத்தையா ஒலிம்பிக் தீப்பந்தம் கொழுத்த, மூவேந்தர் சின்னம் பொறித் நிலையக் கொடியை நிலையத் தலைவர் திரு. இ மலக்கியாஸ் ஏற்றிவைக்க விழா ஆரம்பமாகியது. விளையாட்டுப் போட்டியில் நீச்சல், கட்டு மரம் வலித்தல், கயிறு இழுத்தல், சறுக்கு மரம் ஏறுதல் முதலியன பார்வையாளரின் உள்ளத்தை கவர்ந்தன. குடிசைக் கைத்தொழில் மாவட்ட அதிபரின் பாரிபார் பரிசில்கள் வழங்கினார்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

வெள்ளி 4-5-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 காலைக் கதிர், 7-30 திரைஇசை, 7-45 தோத்திரப் பாடல்கள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாகஸ்வரம், 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வீணை.

இரவு 7-00 ஞானாஞ்சலி, 7-30 நேயர்விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 விமர்சனம், 9-30 எம். வர்ணகுலசிங்கம் -பாட்டு, 10-15 கோஷ்டிகானம்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15.)

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 விராலிமலை ஏ. என். சிங்காரம் - நாகஸ்வரம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 மாதர் நிகழ்ச்சி, 1-30 குரலிசை, 1-50 வாத்தியஇசை, 2-10 டி. கே. தங்கமணி -பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 சாந்தி கதை, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 டி. கே. ரங்காச்சாரி - பாட்டு, 8-30 டெல்லிஅஞ்சல், 8-40 டி. கே. ரங்காச்சாரி - பாட்டு, 9-15 பலகணி, 9-30 புதுமலர், 9-45 இசைமாலை.

## பிரஜா பதிவு இலாகாவின் சங்கடம்

கொழும்பு, புதன்

இலங்கையிலுள்ள இந்திய பாகிஸ்தானிய மக்களைப் பிரஜைகளாகப் பதிவு செய்யும் இலாகாவுக்கு ஒரு பிரச்சினை ஏற்பட்டுள்ளது. பிரஜா பதிவு செய்வதெற்கென விண்ணப்பஞ் செய்த பலரின் விண்ணப்பங்கள் அவர்களது பிறப்பு அத்தாட்சிப்பத்திரங்களின்றியே அங்கீகரிக்கப்பட்டுள்ளன. பிறப்பு அத்தாட்சிப் பத்திரமின்றிச் சத்தியப் பிரமாணஞ் செய்து பலபேர் தம்மைப்பதிவு செய்து கொண்டுள்ளனர். இது காரணமாக இன்று இலாகாவுக்கு வேலைகள் அதிகரித்துள்ளன.

ஒரே குடும்பத்தைச்சேர்ந்தவர்களில் சிலர் சத்தியப்பிரமாணஞ் செய்து பதிவு அங்கீகாரம் பெற்றுக் கொண்டும் சிலர் சத்தியப்பிரமாணஞ் செய்து கொள்ளாமலும் இருக்கின்றனர்.

விண்ணப்பஞ்செய்த பலர் தமது குழந்தைகளின் பிறப்பு அத்தாட்சிப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கத் தவறியுள்ளார்கள். இலாகாபலதடவைகள்பிறப்பு அத்தாட்சிப்பத் திரங்களை கோரியிருந்த போதும் அவர்கள் சமர்ப்பிக்கத் தவறியுள்ளார்கள். சத்தியப்பிரமாணஞ் செய்து கொண்டவர்களுக்கும் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட்ட குழந்தைகளுக்குமே பதிவு அங்கீகாரம் வழங்குவதென இலாகா தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது.

## சிலாபத்தில் மேதினம்

சிலாபம், வியாழன்

எளிய வாழ்வைக் கடைப்பிடித்து 8 தெய்வீக கொள்கைக்கிணங்க ஒழுகுமாறு அதிவண. பிதா ராபர்ட்பெர்ருண்டோ இங்கு நடைபெற்ற மேதினக்கூட்டத்தில் கேட்டுக்கொண்டார். அர்ச் சூசையப்பரின் திருச்சொரூபத்தைக்கொண்டு படகு ஊர்வலம் ஒன்றும் நடைபெற்றது. பின் வாணவேடிக்கைகள் நிகழ்ந்தன. தேவாலயத்துக்கு முன்னால் திறந்த வெளியில் பெரிய பாடற்பூசை நடைபெற்றது.


# 26%

## நீண்டகால உபயோகத்திற்கு

### புதிய எவரெடி ரேடியோ பாட்டரிகள்




★ இலங்கை எங்கும் இப்பொழுது கிடைக்கும்.

★ புகழ் மிக்க புதிய எவரெடி மினிமாக்ஸ் ரேடியோ பாட்டரி.

★ 26% அதிக சக்தி உள்ளவையாகையால்........ நீண்டகால உழைப்புக்கு உகந்தவை.

கவர்ச்சிகரமான சிவப்பு, நீல வர்ணமுள்ள கவர்களையுடைய புதிய எவரெடிமினிமாக்ஸையே பார்த்து வாங்குங்கள்!

தங்க நிறமுடைய அடையாள முத்திரை இருக்கிறதா என்றும் பார்த்து வாங்குங்கள் அதுவே பாட்டரி விற்பனைக்கு முதல் பரீட்சிக்கப்பட்டதற்கு அத்தாட்சி.

உத்தரவாத அடையாளம் தங்க நிற முத்திரை. அதை அவதானித்து வாங்குங்கள்!

**தங்க நிற அடையாள முத்திரைதான் உத்தரவாத அடையாளம்.**

★ ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பில் 4-00 — 4-30 மணிக்கிடையில்நடைபெறும் எவரெடி இசைக்களஞ்சியம் நிகழ்ச்சியைக்கேட்டு ரசியுங்கள்.

# லோக சபையில் இலங்கைத் தமிழர் பிரச்சினை

புதுடில்லி. மே 3

இலங்கையிலுள்ள தமிழர் பிரச்சினை விஷயமாக இந்திய அரசாங்கம் தலையிட வேண்டும் என்று சென்னை தி. மு. க. மெம்பர் திரு. கே. மனோகரன் கூறியதைப் பற்றி, இன்று லோக சபையில் பிரதமர் நேருஜி விவாதத்துக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

உடன் திரு. மனோகரன் எழுந்து இந்தியா இதில் தலையிடத்தான் வேண்டுமென்று தாம் கூறவில்லை என்றார். இதைக் கேட்க தாம் மகிழ்ச்சி அடைவதாகக் கூறிய நேருஜி மேலும் குறிப்பிட்டதாவது:-

"இலங்கையிலேவிலா முடிந்த வியாபாரிகளைப் பற்றிய தே இந்தியாவின் பிரச்சினை தோட்டத் தொழிலாளர் விஷயம் துரதிருஷ்டமானது அவர்கள் இந்தியப் பிரஜைகளோ, இலங்கைத் தேசத்தவரோ இல்லை என்று சொல்லத்தக்க நிலையில் உள்ளனர் என்றாலும், இலங்கை அரசாங்கம் நம்முடன் நட்புறவுடனுள்ளது. இந்தியாவும் இலங்கையுடன் நட்பாகவுள்ளது. இவ்விஷயங்களில் இலங்கையை எவ்விதத்திலும் வற்புறுத்துவது நல்லதென்று நான் கருதவில்லை. சந்தர்ப்பம் ஏற்படும்போதெல்லாம் நாங்கள் இதைப் பற்றிப் பேசுகிறோம்."

## நேருஜி விஜயம் ஒருமாதம் ஒத்திவைப்பு

கொழும்பு, வெள்ளி

வருகிற ஜூலை மாதத்தில் இலங்கை பார்லிமெண்டில் வரவு செலவுத் திட்டம் விவாதிக்கப்பட இருப்பதால், நேருஜியின் விஜயத்தை ஒரு மாதத்துக்கு அதாவது ஆகஸ்ட் மாதத்துக்கு ஒத்திவைக்குமாறு இலங்கை அரசாங்கம் கேட்டுள்ளதாக விஷயமறிந்த வட்டாரங்கள் மூலம் தெரிகிறது.

# உடனடியாக இலங்கை திரும்பவும்

## மைத்திரிபாலாவுக்கு பிரதமர் தந்தி

கொழும்பு, வியாழன்

வெளிநாட்டிலுள்ள உள்நாட்டு, கைத்தொழில் கலாசார விவகாரமந்திரி திரு. மைதிரிபால சேனநாயக்காவை உடனடியாக நாடு திரும்புமாறு பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தந்திமூலம் கேட்டுள்ளார்.

வெலிமடை, அநுராதபுரம், மூதூர் உப தேர்தல்கள் பற்றியும் உப தேர்தல்களில் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் அபேட்சகர்களை நிறுத்துவதற்குக் கட்சியின் அபேட்சகர் தெரிவுக்கு திரு. மைதிரிபாலசேனநாயக்கா [illegible] தால் முடிவு எடுக்கவும் செய்ய முடியாமலிருப்பதாலுமே பிரதமர் இத் தந்திச் செய்தியை அனுப்பியுள்ளார்.

தற்சமயம் ஜெர்மனியிலிருக்கும் திரு. மைத்திரிபால சேனநாயக்கா இம்மாதம் 10-ம் திகதி இலங்கை வருவதாக முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது.

## மீனவர்கள் வீடு திரும்பினர்

யாழ்ப்பாணம், வெள்ளி

பருத்தித்துறையைச் சேர்ந்த காணமற்போன 6 மீனவர்கள் இன்று காலை சுகமாக வீடு திரும்பினர் என அறிவிக்கப்படுகிறது.

## மேலைக் கரம்பன்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றரை மணிநேரம் பேசினார்கள். பின்னர் "சித்தாந்தம்" ஆசிரியர் திரு. முருகவேள், மானிடப் பிறப்பின் அருமையையும் தெய்வ அருள்பெற்று உய்யவேண்டிய வகையினையும்பற்றிக் கூறினர். காரியதரிசி திரு. சுப்பையா நன்றி கூறினர். திரு. கே. பி. ஹரன் தலைமைவகிக்க, விதானையாரான திரு. தியாகராசா வரவேற்புரை நிகழ்த்தினர் ஏராளமான ஆண்களும் பெண்களும் கூடி பிரசங்கங்களைக் கேட்டு இன்புற்றனர்.

# 'ஈழநாடு' கிரிக்கட் போட்டி

இதுவரை நமக்குக் கிடைத்த கூப்பன்களின் பிரகாரம், முதல் 8 இடங்கள் வகிப்பவர்களின் பெயர்கள் வருமாறு:-

| | | |
|---|---|---|
| 1. | கே. பாலகிருஷ்ணன் | யாழ். இந்துக்கல்லூரி |
| 2. | ஜே. கனகநாயகம் | யாழ். மத்திய கல்லூரி |
| 3. | என். தியாகராஜா | யாழ்ப்பாணக் கல்லூரி |
| 4. | யே. அல்பிரட் | பரமேஸ்வராக் கல்லூரி |
| 5. | ஜி. பாலசிங்கம் | ஹாட்லிக்கல்லூரி |
| 6. | எம். தெய்வேந்திரா | சென்.ஜோன்ஸ் கல்லூரி |
| 7. | டி. எம். செல்வநாயகம் | ,, ,, |
| 8. | எஸ். மகமட் | யாழ். மத்திய கல்லூரி |

## வடமாகாண கிரிக்கெட் வீரர் 1962

'விக்னராஜா' பரிசுக் கிண்ணத்துக்காக 'ஈழநாடு' நடாத்தும் தெரிவு.

1962-ம் ஆண்டின் வடமாகாண கிரிக்கெட் வீரராகப் பின்வருபவரை நான் தெரிவு செய்கின்றேன்.

கிரிக்கெட் வீரர் ..............................

கல்லூரி ..............................

எனது பெயர் ..............................

விலாசம் ..............................

இக்கூப்பனைக் கத்தரித்து 'கிரிக்கெட் வீரர் 1962', C/o. 'ஈழநாடு', தபாற்பெட்டி எண்: 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்புக.

## தமிழரசுக் கட்சி பற்றி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாக இருந்து வந்திருக்கிறது தமிழரசுக்கட்சியினர் தாம்ஆரம்பித்த சத்தியாக்கிரகத்தால் நல்ல பலனை அடைய முடியாது போனதால் தற்பொழுது மலை நாட்டுப் பகுதிகளுக்கு ஆதரவு தேட வரத் தொடங்கியுள்ளனர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கும் தமிழரசுக் கட்சிக்குமிடையில் உறவு ஏற்பட வேண்டுமென்பது சம்பந்தமான பிரேரணையொன்று தொழிலாளர் காங்கிரஸ் கமிட்டி சமீபத்தில் கூடியபோது சமர்ப்பிக்கப் பட்டது. தமிழரசுக் கட்சித் தலைவர்களிடையே பொறுப்புணர்ச்சி நிலவும் என்ற நம்பிக்கையில் இதுபற்றிய பரிசீலனை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

### தேசியப் பதிவு புத்தகம்

தேசியப் பதிவு புத்தகம் சம்பந்தமான மசோதா அனுபவ சாத்தியமற்றது; எண்ணிக் கூடப் பார்ப்பதற்கு முடியாதது என்று இலங்கை அரசாங்கம் தேசியப் பதிவு புத்தகம் தயாரிப்பது சம்பந்தமாகக் குறிப்பிட்டு தெரிவிக்கையில் திரு. தொண்டமான் கூறினர்.

அவர் இதுபற்றித் தொடர்ந்து கூறியதாவது:-

இலங்கையில் பத்தில் ஒரு பகுதியினரான 10 லட்சம் மக்களின் பிரஜா உரிமை பற்றி இன்னும் திட்டவட்டமாகத் தீர்மானிக்கப்படாத பட்சத்தில் இவ்வித முயற்சி சாத்தியமாகாது. 'நாடற்றவர்' என்ற நிலையிலிருக்கும் இந்திய வம்சாவளியினரின் அந்தஸ்து குறித்து ஒரு முடிவான தீர்மானம் பெறப்படும்வரை இந்தத் திட்டத்தை ஒத்திவைக்குமாறு நாம் அரசாங்கத்தைக் கேட்டுள்ளோம். இவ்வருடம் ஆகஸ்டில் நேரு இலங்கை வரும்போது 'நாடற்றவர்' பிரச்சினை குறித்து விவாதிக்கப்படலாம்.

மலை நாடுகளில் நாடற்றவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் நிலவுவது தீவிரப் பிரச்சினையாகி வருகிறது என்றும் திரு. தொண்டமான் தெரிவித்தார்.


**நெற்காணி தேவை**

கிளிநொச்சி, வவுனியா, மன்னாரில் நீர்ப்பாய்ச்சலுடைய பத்து, பதினைந்து ஏக்கர் நெற்காணியும் பனையில் நன்றாய் காய்க்கும் இருபத்தைந்து ஏக்கர் தென்னந்தோட்டமும் நல்ல இடத்தில் விலைக்குத்தேவை. கந்தையா, நூதனசாலை, யாழ்ப்பாணம்.

**காணி விற்பனைக்கு**

சாவகச்சேரி பட்டினத்தில் பிரதான பஸ் பாதையில் மின்சார முதலிய வசதிகளுள்ள எட்டறை வீடும், கிணறும் தென்னை, மா முதலிய மரங்களுமுள்ள ஐந்துபரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. கனகரத்தினம் 7 பெரிய தெரு, யாழ்ப்பாணம்.

**மனேச்சர் தேவை**

நவற்கிரி ப. நோ. கூ. சங்க பண்டகசாலையை நடத்துவதற்கு ஒரு மனேச்சர் தேவை.

தராதரம்: J.S.C. உடன் கூட்டுறவுக் கலாசாலையில் பயிற்சி பெற்றவர். S. S. C. சித்தியடைந்தவருக்கு விசேட கவனம் செலுத்தப்படும்.

வயது: 22க்கு குறையாமலும் 40க்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

பிணை: ரொக்கம் 500-00ரூபா

ஆதனம்: 1000-00 ரூபா

சம்பளம்: 100-00—150-00 / 5 X 10

விண்ணப்பம் செய்வோர் 15-5-62க்கு முன்னதாக காரியதரிசி ப. நோ. கூ. சங்கம் நவற்கிரி, புத்தூர் என்று விலாசமிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.

உள்ளூர் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பா. பொன்னம்பலம்
நவற்கிரி. காரியதரிசி.





**குமாரி அம்பிகை நடராஜா**

தமிழ்ப் பல்கலைக் கழக நிதிக்காக சென்னை அடையாறு கலாக்ஷேத்திரத்தைச் சேர்ந்த குமாரி அம்பிகை நடராஜாவின் பரதநாட்டியக் கச்சேரி இன்று மாலை யாழ்ப்பாணம் நகரசபை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.


**2வது வாரம்!**

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) வெம்பிளி (கண்டி)
ஸ்ரீ கிருஷ்ண (திருகோணமலை) மொடர்ன் (பதுளை) லக்ஷ்மி (ரத்தினபுரி)
விஜிதா (மஸ்கெலியா) தீவோலி (நுவரெலியா) ஜெமினி (ராகலை)
நியூசினிமா (குருணகலை)

- இலட்சியங்கள் தான் மனித வாழ்வில் நிலைத்து நிற்கின்றன, என்ற அடிப்படையிலே உருவாகி...
- இன்ப வாழ்வுக்கு, இதய நிறைவுக்கு காதலே ஆதாரம் என்று ஒளி காட்டி....
- ஒன்றுபட்ட இல்லறத்திலேதான் உள்ள அமைதி பிறக்கும் என்பதை நிலை நிறுத்தி....
- பிரிவிலே ஏற்படுகின்ற வேதனை மிகமிகப் பொல்லாதது என்று எடுத்துக் காட்டி....
- இன்பக் காட்சிகளும், இனிய பாடல்களும் இணைந்த காதல் காவியமாக, உங்கள் இதயத்தைக்கொள்ளைகொள்ள வந்திருக்கிறது....


சிவாஜி கணேசன்-சரோஜாதேவி
எம். ஆர். ராதா - சௌகார் ஜானகி
நடித்த
**பாலும் பழமும்**

மனோஹரா (யாழ்ப்பாணம்)
பிரேம் நஸீர்-எம்.என்.ராஜம் நடித்த
ஒரே வழி


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு மே மாதம் 4-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.